Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 091 | வியாழக்கிழமை | மாசி 13 ஆம் நாள் 25 பெப்ரவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## முதலாம் தவணை விடுமுறை இன்று!

கொழும்பு, பெப். 25
2021ஆம் ஆண்டுக்கான அரச மற்றும் அரச அனுமதி பெற்ற பாடசாலைகளின் முதலாம் தவணைக்கான விடுமுறை இன்று முதல் வழங்கப்ப 19

### பொறுப்புக்கூறலை மறுத்தால்

# இலங்கையின் மீது மாற்று நடவடிக்கை!

### அமெரிக்கத் தூதர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்ரவரி 25
இலங்கை ஓர் இறைமையுள்ள நாடு. பல்லின மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கம் ஆட்சியிலுள்ளது. எனவே அனைத்து மக்களும் சமமான உரிமைகளோடு, வாழ்வதை உறுதிப்படுத்துவதோடு, அநீதிகளுக்கு பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடும் இலங்கை அரசாங்கத்துக்கு உண்டு. ஆனால் அந்தப் பொறுப்புக்கூறலை இலங்கை மறுத்தால், மாற்றுத் தெரிவுகள் மற்றும் நடவடிக்கைகள் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். 19

### யாழில் இதுவரையில்

## 955 பேர் சுயதனிமை

### மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 25
யாழ். மாவட்டத்தில் தற்போது 487 குடும்பங்களைச் சேர்ந்த 955 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.
கொரோனாப் பெருந்தொற் 19

## இலங்கைக்கு எதிராக ஒத்துழைக்கும் அமெ.!

*அதன் இராஜாங்க செயலாளர் அன்ரனி பிளிங்டன் அறிவிப்பு*

கொழும்பு, பெப். 25
இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் கொண்டுவரப்படும் பிரேரணைக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.
மனித உரிமைப் பேரவையின் 46ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் நடைபெற்று வருகின்ற நிலையில் 19

## போர்க் குற்றவாளிகளுக்கு தண்டனையை வழங்குக!

### தமிழர்களின் எதிர்பார்ப்பும் இதுவே இரா.சம்பந்தன் அழுத்தம் திருத்தம்



யாழ்ப்பாணம், பெப். 25
இலங்கை அரசு பொறுப்புக்கூறும் வகையிலும், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் வகையிலும், போர்க் குற்றவாளிகளுக்குத் தண்டனையை வழங்கும் வகையிலும் தீர் 19



## ஊடக அச்சுறுத்தலைத் தடுக்க அமெரிக்கா கரிசனை எடுக்கும்

*அலைனா உறுதி*

யாழ்ப்பாணம், பெப். 25
இலங்கையில் இடம்பெற்ற, இடம்பெறுகின்ற ஊடக அச்சுறுத்தல்களை அமெரிக்கா தொடர்ந்து எதிர்க்கும்- இவ்வாறு தெரிவித்தார் இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் 19

## கொரோனாத் தடுப்பூசி மீது அவநம்பிக்கை வேண்டாம்!

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் விளக்கம்



யாழ்ப்பாணம், பெப். 25
கொரோனாத் தடுப்பூசி போட்டுக்கொண்டாலும் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். முதலாவது தடுப்பூசி ஏற்றி 3 தொடக்கம் 4 வாரங்களின் பின்னர் 70 சதவீதமே எதிர்ப்பு சக்தி உருவாகும். இரண்டாவது தடுப்பூசியும் போட்ட பின்னரே 85 சதவீதம் எதிர்ப்பு சக்தி உருவாகும். இவ் 19

## 5 ஆண்டை தொட்டது வவு. உறவுகளின் போராட்டம்

### நேற்றும் கவனவீர்ப்பு

வவுனியா, பெப். 25
காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டறிந்து தருமாறு வலியுறுத்தி வீதியில் போராட்டம் நடத்திவரும் வவுனியா உறவுகளின் போராட்டம் ஐந்தாவது ஆண்டை 19

## மேலும் எழுவருக்கு வடக்கில் தொற்று!

யாழ்ப்பாணம், பெப். 25
வடக்கு மாகாணத்தில் மேலும் ஏழு பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை 19

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இந்தியாவுக்கான ஒரு வாய்ப்பே!

### விக்னேஸ்வரன் எம்.பி தெரிவிப்பு

கொழும்பு, பெப்.25
இந்தியாவின் தென்கோடியின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் இலங்கையின் வடக்கு- கிழக்கில் தமிழ் மக்களுக்கென உச்சபட்சமான நிரந்தரமான அதிகாரக் கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கும் இந்தியா 19

## யாழ்ப்பாண பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 25
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 35ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா நேற்றுக் காலை ஆரம்பமாகியது.
நேற்றும், இன்றும் 6 அமர்வுகளாக இடம்பெறவுள்ள இந்தப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது அமர்வில் யாழ். பல்கலைக்கழக வேந்தர் தகைசார் பேராசிரியர் எஸ்.பத்மநாதன் தலைமை தாங்கிப் பட்டங்களையும், தகை 20

மூதாட்டியின் நகையை

# அடகு வைக்க முயன்று மாட்டிய கொள்ளையன்

ஊர்காவற்றுறையில் சம்பவம்

**யாழ்ப்பாணம், பெப். 25**
**யாழ்ப்பாணம் வேலணையில் தனிமையில் வசித்துவந்த மூதாட்டியை கத்தி முனையில் அச்சுறுத்தி நகையைக் கொள்ளையடித்தவர், அந்த நகையை நேற்று அடகு வைத்த போது கைதுசெய்யப்பட்டார் என்று ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.**

கைதுசெய்யப்பட்ட நபர் கிளிநொச்சியைச் சேர்ந்த 25 வயதுடையவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த 22 ஆம் திகதி இந்த கொள்ளை இடம்பெற்றிருந்தது. வீடு புகுந்த கொள்ளையன், அங்கு தனிமையில் வசித்த மூதாட்டியை அச்சுறுத்தி அவரிடமிருந்து ஐந்தரைப் பவுண் நகையைக் கொள்ளையடித்துச் சென்றிருந்தான். பாதிக்கப்பட்ட மூதாட்டி ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். இந்த நிலையில், சந்தேகநபர் வேலணையில் உள்ள வங்கி ஒன்றில் நகையை, நேற்று அடகு வைக்க முற்பட்டபோதே, கைதுசெய்யப்பட்டார் என்று மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர். (த-25)

# யாழ்.போதனாவிலும் வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம், பெப். 25
நாடு முழுவதும் சுகாதார ஊழியர்கள் நேற்றுத் தொடக்கம் இரண்டு நாள்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ள நிலையில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பணியாற்றி வருகின்ற 650 சுகாதார பணியாளர்களில், சுமார் 500 பணியாளர்கள் நேற்று வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதித்தனர். இன்றும் இந்தப் போராட்டம் தொடரும் என்றும் தெரிவித்தனர். நேற்று 161 பணியாளர்கள் மாத்திரமே பணியில் ஈடுபட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
ஒரு லட்சம் பேரை தாதிய உதவியாளர்களாக நியமிக்கும் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே அவர்கள் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.
இவர்களுக்கு அம்புலன்ஸ் சாரதிகளும் சுகாதார ஊழியர்களும் ஒத்துழைப்பு வழங்கினர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-25)

# முஸ்லிம் எம்.பிக்களை சந்தித்தார் இம்ரான் கான்

கொழும்பு, பெப். 256
பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானை, முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்திக்க அரசு அனுமதி மறுத்திருந்த நிலையில், அதையும் தாண்டி இறுதிநேரத்தில், இருதரப்பினரும் கொழும்பு ஷங்கிரில்லா ஹொட்டலில் நேற்று மாலை சந்தித்துக் கலந்துரையாடினர்.
இதன்போது, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான பைசல் காசிம், ஹலீம், ஹாபிஸ் நஸீர் அஹமட், தௌபீக், ஹரீஸ், அலி சப்ரி ரஹீம், முஷாரப், இஷாக் ரஹ்மான், முஜிபுர் ரஹ்மான், இம்ரான் மஹ்ரூப், ஹலீம், உட்பட முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர்.
இந்த சந்திப்பில் முஸ்லிம்களின் ஜனாஸா எரிப்பு தொடர்பிலும், அதனால் இலங்கை வாழ் முஸ்லிம் சமூகத்தின் மனக்கவலைகள் குறித்தும் நாடாளுமன்ற முஸ்லிம் உறுப்பினர்கள் பிரதமர் இம்ரானிடம் எடுத்துரைத்தனர். அத்துடன், முஸ்லிம் சமூகத்தின் சமகால நெருக்கடிகள் குறித்தும் அவர்கள் பிரதமர் இம்ரான் கானுக்கு தெளிவுபடுத்தினர். பாதுகாப்புக் காரணங்களுக்காக குறித்த இரு தரப்பினருக்கும் இடையிலான சந்திப்புக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்று முன்னர் அரச தரப்பைச் சேர்ந்த ஹெகலிய ரம்புக்வெல குறிப்பிட்டிருந்தார். இந்த நிலையில், இறுதிநேரத்தில் சந்திப்பு நடைபெற்றுள்ளது. (த-இ)

(முன்னர் வந்த செய்தி 7ஆம் பக்கம்)

# சுங்கப் பிரிவை மதிப்பிடவும் ஜனாதிபதி ஆணைக்குழு

கொழும்பு, பெப். 25
இலங்கை சுங்கத் திணைக்களத்தின் தற்போதைய நிலைமைகளை மதிப்பீடு செய்து, அதன் செயல் திறனை மேம்படுத்தும் வகையிலான பரிந்துரைகளை சமர்ப்பிக்கவென ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச, ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமித்துள்ளார்.
சுங்கத் திணைக்களத்தின் மீதான பல்வேறு குற்றச்சாட்டுகளை ஆய்வுசெய்வது, சுங்கத்துக்கு எதிரான முறைகேடுகளைத் தடுப்பது மற்றும் திறமையான, பயனுள்ள சேவைகளை வழங்குவது என்பன குறித்த பரிந்துரைகளை வழங்குவது ஆணைக்குழுவின் பணியாகும்.
சுங்கத் தொழிற்சங்கங்களால் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்களை மறுஆய்வு செய்வது உட்பட பொதுமக்கள் மற்றும் பிற தரப்புக்களின் கருத்துக்களைக் கேட்கவும் ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.
இந்த ஆணைக்குழுவுக்கு உயர்நீதிமன்ற நீதிபதி ஷிரன் குணரத்ன தலைமை தாங்குகிறார். மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பிரியந்த பெர்னாண்டோ, உயர் நீதிமன்ற நீதிபதி டமித் தொட்டவத்த, இலங்கை மத்திய வங்கியின் துணை ஆளுநர் கே.எம்.எம் சிறிவர்தன, மூத்த ஆலோசகர் சனத் ஜெயநெத்தி மற்றும் இலங்கை சுங்க முன்னாள் மேலதிக பணிப்பாளர் நாயகம் பி.ஏ. டயஸ் ஆகியோர் ஏனைய உறுப்பினர்களாவர். (த-இ)

# சிற்றூழியர்களுக்கு பதிலாக இராணுவத்தினர் பணியில்!



கொழும்பு, பெப். 25
சுகாதார சேவைகளில் கடமையாற்றும் சிற்றூழியர்கள் நாடு முழுவதும் இரண்டு நாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள நிலையில், அவர்களின் கடமைகளைத் தொடர்வதற்கு என்று இராணுவத்தினர் களமிறக்கப்பட்டிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
மருத்துவமனை சிற்றூழியர்களின் வேலைநிறுத்தத்தால் மருத்துவமனைகள், சுகாதார நிலையங்களில் நோயாளர்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டனர். இந்த நிலையில் சில மருத்துவமனைகளில் சிற்றூழியர்களின் கடமைக்காக இராணுவத்தினர் களமிறக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
பதுளை பொது மருத்துவமனையில் சிற்றூழியர்கள் புரியும் கடமைகளில் நேற்று இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-இ)

# தவறி வீழ்ந்த பெண் நேற்று உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், பெப். 25
மோட்டார் சைக்கிளில் பயணிக்கும்போது தவறி வீழ்ந்து காயமடைந்த குடும்பப் பெண் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
சம்பவத்தில், பூநகரி அடம்பன்கிராயைச் சேர்ந்த சிறீரா மநாதன் சந்தானலக்ஸ்மி (வயது 59) என்பவரே உயிரிழந்தார்.
கடந்த 9ஆம் தகதி யாழ்ப்பாணம் அரியாலையிலுள்ள வீடொன்றுக்கு வந்து, மகளுடன் மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் அமர்ந்து பயணிக்கும்போது அவர் தவறி வீழ்ந்துள்ளார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
காயமடைந்த இவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்தநிலையில், சிகிச்சை பயனளிக்காது நேற்றுக்காலை உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் விசாரணை நடத்தினார். (த-26.25)

# உறவுகளின் சங்க செயலரிடம் ரி.ஐ.டியினர் நேற்று விசாரணை

கிளிநொச்சி, பெப். 25
வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் லீலாதேவி ஆனந்தநடராஜாவிடம் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் விசாரணை நடத்தினர்.
கிளிநொச்சியில் அமைந்துள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவினரின் அலுவலகத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது என அவர் தெரிவித்தார்.
"கடந்த17ஆம் திகதி பயங்கரவாத தடுப்பு பிரிவினர் என்னை விசாரணைக்காக கொழும்பு வருமாறு எனது மகளின் வீட்டில் அறிவித்தல் ஒன்றை வழங்கியிருந்தார்கள். எனது வயது மற்றும் சுகவீனம் தொடர்பில் நான் அவர்களுக்கு தொலைபேசி ஊடாக கூறியிருந்தேன். வவுனியா அல்லது கிளிநொச்சிக்கு என்னால் வர முடியும் எனவும் அவர்களிடம் குறிப்பிட்டிருந்தேன். அதற்கு அமைவாக கிளிநொச்சி அலுவலகத்துக்கு வருமாறு அழைத்திருந்தனர்.
அங்கு நான் சென்றிருந்தேன். இதன்போது, எனது வங்கிக் கணக்குகள், வங்கிக்குப் பணம் வருவது உள்ளிட்ட விவரங்களை அவர்கள் வைத்திருந்தார்கள். எனது வங்கி கணக்கு தொடர்பில் துருவித் துருவி ஆராய்ந்தார்கள். அதற்கு நானும் பதிலளித்திருந்தேன். எனது மகன் வெளிநாட்டில் உள்ளார். அதேபோல எனது சகோதரர்களும் வெளிநாட்டில் உள்ளார்கள். காணி விற்ற பணமும் வங்கியில்தான் உள்ளது என்று அவர்களிடம் கூறியிருந்தேன்.
2010ஆம் ஆண்டு ஜெனிவா சென்றீர்களா என வினாவினார்கள். 2010 நான் செல்லவில்லை எனவும் 2018 மார்ச்சிலிருந்து தொடர்ச்சியாகச் சென்றிருந்தேன் எனவும் தெரிவித்திருந்தேன்.
அங்கு என்ன கதைத்தீர்கள் என்று கேட்டனர்.
எமக்கு நீதி கிடைக்கவில்லை, எமது பிள்ளைகளை அரச படைகளிடம் நாங்கள் கையளித்தோம். இன்னும் பலர் சரணடைந்தார்கள். இலங்கை அரசிடம் அழுத்தம் கொடுத்தாவது எமது பிள்ளைகளை மீட்டுத் தாருங்கள் என்று கோரியிருந்தோம். அத்தோடு இலங்கையில் நீதி கிடைக்காது. அந்த நீதி சர்வதேசத்திடமிருந்துதான் கிடைக்க வேண்டும் என்பதையும் நான் கூறியிருந்தேன்" என்று அவர் தெரிவித்தார். (த-6)

# நீதியை நிலைநாட்டும் எண்ணம் இலங்கைக்கு கடுகளவும் இல்லை

## அரசின் விளக்கத்துக்கு சுடச்சுடப் பதிலடி

**கொழும்பு, பெப். 25**

**இறுதிப்போரில் இழைக்கப்பட்ட சர்வதேச குற்றங்களுக்கு நீதியை நிலைநாட்டும் எவ்வித நோக்கமும் இலங்கைக்கு இல்லை என்பது வெட்டவெளிச்சமாகியுள்ளது.**

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வில் உரையாற்றிய இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவின் உரை இதைத் தெளிவாகப் படம் போட்டுக் காட்டுகின்றது என்று சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஜெனிவாவுக்கான பணிப்பாளர் ஜோன் பிசர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையின் 46ஆவது கூட்டத்தொடரில் வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன நேற்றுமுன்தினம் ஆற்றிய உரையைத் தொடர்ந்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

'இலங்கை வெளிவிவகார அமைச்சர் மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத்தொடரில் சர்வதேச குற்றங்களை மறுத்துள்ளார்.

அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் இருந்து பின்வாங்கியுள்ளார்.

மனித உரிமைகள் ஆணையகத்தின் அறிக்கையை 'பரப்புரை நடவடிக்கை' என்று நிராகரித் துள்ளார்.

இதனைச் செவிமடுத்த பின்னர் நீதியை நிலைநாட்டும் எந்தவித நோக்கமும் இலங்கைக்கு உள்ள தென்பதனை எவரும் நம்பமாட்டார்கள். சர்வதேச பொறுப்புக்கூறல் நடவடிக்கையே தற்போது தேவையானது' என்று ருவிற்றரில் பதிவிட்டுள்ளார். (ஒ.இ)

# 2 சிறுமிகள் துஷ்பிரயோகம்: வேலணை நபர்கள் கைது

யாழ்ப்பாணம், பெப். 25

காதலிப்பதாக ஆசை வார்த்தை கூறி இரண்டு சிறுமிகளை நண்பரின் வீட்டுக்கு அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

வீதித்திருத்த பணியில் ஈடுபட்டிருந்த சந்தேக நபர்கள் இருவரும், அந்த வழியால் சென்ற இரு சிறுமிகளிடமும் தமது தொலைபேசி இலக்கத்தை கொடுத்து, பின்னர் தமது வலையில் அவர்களை வீழ்த்தினர். அதனையடுத்து தம்மை அவர்கள் காதலிக்கின்றனர் என நம்பிய சிறுமிகள், சந்தேகநபர்களைச் சந்திக்க நாவற்குழிப் பகுதியில் உள்ள வீடொன்றுக்குச் சென்றுள்ளனர். அது தமது நண்பர் ஒருவரின் வீடு எனச் சந்தேக நபர்கள் கூறியிருந்தனர். அங்கு வைத்தே சிறுமிகள் பாலியல் துஷ்பிர யோகத்துக்கு உட்படுத்தப்பட்டனர் என கூறப்படுகின்றது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியைச் சேர்ந்த 14 வயதான இரண்டு சிறுமிகளும் கடந்த 18ஆம் திகதி தமக்கு நடந்த விடயத்தை தமது உறவினர்களுக்குக் கூறியுள்ளனர். சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில், சந்தேகநபர்கள் இருவரும் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர். விசாரணைகளின் பின்னர் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-25,26)

# ஆளும் கட்சிகள் இன்று சந்திப்பு

கொழும்பு,பெப்.25

சிறிலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஆளும் தரப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களுக்கிடையில் முக்கிய கலந்துரையாடல் இன்று இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்குமாறு, ஆளும் கட்சித் தலைவர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

நடப்பு அரசியல் நிலவரங்கள் குறித்து இதன்போது, முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (க-இ)



இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், இலங்கை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை நேற்றுக் காலை சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது இரு தரப்புகளுக்கும் இடையிலான பொதுவான விடயங்கள் குறித்துப் பேசப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.இ)

# சுற்றுலா வழிகாட்டிகளுக்கு விருது வழங்கும் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், பெப். 25

இலங்கை சுற்றுலா அதிகார சபையின் ஏற்பாட்டில் சுற்றுலா வழிகாட்டிகளுக்கான விருது வழங்கும் நிகழ்வு யாழ். நகர ஜெற்விங் நட்சத்திர விடுதியில் இன்று நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினர்களாக வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் இந்திய துணைத்தூதுவர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (த-25)

# ஏப்.21 தாக்குதல் அறிக்கை சபையில் இன்று சமர்ப்பிப்பு!

கொழும்பு,பெப்.25

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பணிப்புரை விடுத்துள்ளார்.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி விசாரணை அறிக்கை நேற்று முன்தினம் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது. அந்த அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்படவில்லை. எனினும், நாடாளுமன்ற வாசிகசாலையில் வைக்கப்பட்டது.

குறித்த அறிக்கையின் பிரதிகள் தயாரிக்கப்பட்ட பின்னர் சபையில் சமர்ப்பிக்கப்படும் என்று சபாநாயகர் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் குறித்த அறிக்கை இன்று சமர்ப்பிக்கப்படும் என்று தெரியவருகின்றது.

அறிக்கை தொடர்பில் விவாதம் கோருவதற்கு எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

அதேவேளை, ஏப்ரல் 21 தாக்குதல் அறிக்கை தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சர் சமல் ராஜபக்ச தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவை உப குழு நேற்று இரண்டாவது நாளாகவும் கூடி, ஆராய்ந்தது. இந்தக் குழு தனது அறிக்கையை மார்ச் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதியிடம் கையளிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (க-44)

# 'கிங்மேக்கர்கள்' சந்திப்பு அரசியலில் பெரும் பரபரப்பு

கொழும்பு,பெப்.25

கொழும்பு அரசியலில் ஆட்சியைத் தீர்மானிக்கும் இரு துருவங்கள் இரகசியமாகச் சந்தித்துள்ளன என்ற தகவல் கசிந்துள்ளது. சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுனர் பஸில் ராஜபக்சவுக்கும், முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவுக்குமிடையிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது என்று தெரியவருகிறது.

இருவருக்கிடையேயான சந்திப்பில் என்ன விடயங்கள் கலந்துரையாடப்பட்டன என்பது தொடர்பில் அதிகாரபூர்வமான தகவல்கள் இன்னமும் வெளியாகவில்லை.

நாடாளுமன்ற அரசியலுக்கு விடை கொடுத்தாலும் மங்கள சமரவீர இன்னமும் செயற்பாட்டு அரசியலில் இருந்து ஓயவில்லை. சஜித் அணியுடனான உறவும் நன்றாக இல்லை. இவ்வாறான தொரு பின்புலத்திலேயே பஸில் - மங்கள சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

அதேவேளை, இவ்வாறானதொரு சந்திப்பு இடம்பெற்றுள்ளதா என்று பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களான பீரிஸ் மற்றும் சாகர காரியவசம் ஆகியோரிடம் ஊடகவியலாளர்களால் கேள்வி எழுப்பப்பட்டது. இந்தத் தகவலை அவர்கள் நிராகரிக்கவில்லை. "எங்களுக்குத் தெரிந்தவரை அவ்வாறானதொரு சந்திப்பு நடைபெற்றிருக்காது. இருவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தனர். அந்த வகையில் சந்தித்திருக்கவும் கூடும்." - என்ற தொனியில் அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (க-இ)

# உலகப் பாரம்பரியமாகிறது மகாவம்ச ஓலைச்சுவடி

கொழும்பு, பெப். 25

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க மகாவம்ச பனை ஓலைச் சுவடியை உலகப் பாரம்பரியமாக பெயரிட யுனெஸ்கோ முடிவு செய்துள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின்துணை வேந்தர் பேராசிரியர் உபுல் திசநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார். (ஒ.இ)

முறையற்ற நியமனத்தை எதிர்த்து

# சுகாதாரப் பணியாளர்கள் நாடு முழுவதும் போராட்டம்

**யாழ்ப்பாணம்,பெப்.25**

**ஒரு லட்சம் வேலைவாய்ப்பில் தெரிவு செய்யப்பட்டவர்களை சுகாதார சேவைக்குள் நியமிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து நாடு முழுவதும் சுகாதாரப் பணி உதவியாளர்கள் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை நேற்று முன்னெடுத்தனர்.**

வடக்கு மாகாணத்தில், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய இடங்களிலும், இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஒரு லட்சம் வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தொழில் பெற்றுள்ளவர்கள் நிரந்தர ஊழியர்களாக சுகாதார சேவையில் உள்வாங்கப்படவுள்ளனர் என வெளியான தகவல்களை அடுத்தே இந்தப் போராட்டம் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கின் வவுனியா, கிளிநொச்சி, மன்னார், போன்ற மாவட்டங்களில் பிரதான மருத்துவமனைகளின் முன் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கறுப்புப் பட்டி அணிந்தும், சுகாதார ஊழியர்களை புறக்கணிக்காதே! எமதுரிமையை எமக்கு வழங்கு!, முறையற்ற நியமனம் வேண்டாம்!!, மன அமைதியுடன் பணிசெய்யவிடு, கடமை ஒழுங்கை சீர்குலைக்காதே போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஏந்தியவாறும், கோசங்களை எழுப்பியும் அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இது தொடர்பில் போராட்டக்காரர்கள் தெரிவித்ததாவது;

முறையற்ற வகையிலேயே குறித்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. இவர்களைவிட அனுபவமான பலர் பல வருடங்களாக மருத்துவமனைகளில் பணிபுரிந்து வருகின்றனர். இதே வேளை சுகாதாரப்பணி உதவியாளர்களாக பணிபுரிந்த பலருக்கு நிரந்தர நியமனங்கள்கூட இன்னமும் கிடைக்கவில்லை. தற்போது நியமிக்கப்படவுள்ளவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் எங்களை விட அதிகமாக உள்ளது. இதனை ஆள்சேர்ப்பு விதிமுறைகளுக்கு எதிரான ஒரு செயற்பாடாகவே நாம் பார்க்கின்றோம். எனவே ஒரு லட்சம் வேலைவாய்ப்பில் உள்ளீர்க்கப்படும் ஊழியர்கள் சுகாதாரத் துறைக்கு தேவையில்லை. அல்லது அதனை நீதியான முறையில் முன்னெடுக்க வேண்டும் என்றனர்.

**மருத்துவமனைச் செயற்பாடுகள் பாதிப்பு**

சுகாதாரப்பணியாளர்கள்மேற்கொண்ட பணிப்புறக்கணிப்பு காரணமாக கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டன. வெளிநோயாளர் பிரிவு, மாதாந்த சிகிச்சை போன்ற செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டன. நோயாளர்கள் நீண்டதூரங்களிலிருந்து சிகிச்சைக்காக வந்து நீண்டநேரம் காத்திருந்து சிகிச்சை பெறாது திரும்பிச் சென்றதையும் காணமுடிந்தது. அத்துடன் சுகாதாரப் பணியாளர்களில் சிலர் சீருடை அணியாது மனிதாபிமானமாக சேவையில் ஈடுபடுவதையும் காணமுடிந்தது.

(ஐ-110,113,56,214,18)



## வளர்ப்பு மிருகங்களுக்கும் தடுப்பூசி ஏற்றப்படவேண்டும்

**மருத்துவர் யமுனானந்தா வலியுறுத்து**

யாழ்ப்பாணம், பெப். 25

தற்போது உலகை அச்சுறுத்தும் கொரோனா வைரஸ் தொற்று அபாயத்தில் இருந்து உலகம் விடுபட முக்கியமாகக் கருதவேண்டிய அம்சங்களில் முதன்மையானது தடுப்பு மருந்தை சமூகத்தில் ஏற்றுவதே என்று மருத்துவர் சி. எஸ்.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்த செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது;

கொரோனா வைரஸ் திரிபடையும் வேகம் அந்த நோய் தொற்றும் வேகத்துக்கு நேர்விகிதசமனாக அமையும். திரிபடைதல் மருத்துவ இரசாயனங்களாலும், கதிர்வீச்சுக்களாலும் ஏற்படலாம்.

குறிப்பாகக் கொரோனாத் தொற்றுடைய நோயாளிகள் மருத்துவ சிகிச்சைக்கு உட்படும் போது விகாரமடையும் கொரோனா வைரஸ் உருவாகலாம்.

எனவே அடுத்த கட்டமாக விலங்கு மருத்துவத் துறையினரும், செல்லப் பிராணிகளுக்கான கொரோனாத் தடுப்பு மருந்தைப் பரிசீலிக்க வேண்டிய அவசியம் உள்ளது. ஆய்வுகூடங்களில் கொரோனாத் தொற்றைக் கண்டறியும் பி.சி.ஆர் சோதனையை மட்டுப்படுத்தி அன்டிஜன் சோதனையையே அதிகரிக்க வேண்டும். ஏனெனில் ஆய்வுகூடங்களை அதிகரித்து அதிக அளவில் பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொள்ளும்போது முறையான மேற்பார்வை இல்லாதவிடத்து தவறுகளால் கொரோனா வைரஸ் பல வருடங்களுக்கு ஆய்வுகூடங்களில் சேமிக்கப்பட்டு வைக்கப்படலாம். இது மிகவும் ஆபத்தானது.

மானிட நேயத்தையும், மிருக நேயத்தையும் கருதி நாம் கொரோனாத் தடுப்பு ஊசி செயற்றிட்டத்தை விரிவாக்க வேண்டும். தடுப்பூசிகள் அனைவருக்கும் கிடைக்கத்தக்கதாகவும், அனைவரும் சுலபமாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவும் திட்டங்கள் அமைக்கப்படல் வேண்டும்- என்றுள்ளது. (ப)

## பேஸ்புக்கில் பண மோசடி; சிக்கியது நைஜீரியக் குழு

கொழும்பு,பெப்.25

சமூக வலைத்தளத்தினூடாக பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், 4 நைஜீரிய பிரஜைகள் உள்ளிட்ட 8 பேரடங்கிய குழுவொன்று கைது செய்யப்பட்டுள்ளது என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

சமூக வலைத்தளத்தினூடாக அறிவித்தலொன்று விடுக்கப்பட்டு 17 இலட்சத்து 45 ஆயிரம் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது.

பரிசுப்பொதியொன்று கிடைக்கவுள்ளதாகவும் அதனைப் பெற்றுக்கொள்ள பணத்தை வைப்பிலிடுமாறும் கூறப்பட்டதை அடுத்து பேலியகொடை பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றது.

இது தொடர்பில் களனி குற்ற விசாரணைப் பிரிவினரால் விஷேட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. வெவ்வேறு சிம் அட்டைகள் மற்றும் முகப் புத்தக கணக்குகளைப் பயன்படுத்தி மோசடியில் ஈடுபடுகின்ற குழுவொன்று இயங்குவது தெரியவந்துள்ளது. இந்த குழுவிலிருந்த நைஜீரிய பிரஜைகள் நால்வர் உள்ளிட்ட 8 பேர் களனி குற்ற விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளில் குறித்த குழுவிலுள்ள நைஜீரிய பிரஜையொருவர் வசித்து வந்த கல்கிசையிலுள்ள வீடொன்று சுற்றிவளைக்கப்பட்டது.

அந்த வீட்டிலிருந்து மடிக்கணினி வெவ்வேறு நாடுகளில் பயன்படுத்துகின்ற 9 சிம் அட்டைகள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டுள்ளன. இதேவேளை போலி நாணயத்தாள்களை அச்சிடுவதற்குப் பயன்படுத்தப்படும் 100 கடதாசிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

## சுகாதார அமைச்சர் மீண்டும் பணிக்கு

கொழும்பு,பெப்.25

கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்த சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, மீண்டும் பணிக்குத் திரும்பியுள்ளார்.

சுகாதார அமைச்சின் அலுவலகத்துக்குச் சென்ற அமைச்சர், அதிகாரிகளுடன் கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பிலும் பி.சி.ஆர். பரிசோதனைகள் தொடர்பாகவும் கலந்துரையாடினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## ஒரு லட்சம் வேலைவாய்ப்பாளர்கள் சுகாதார சேவைக்குள் இணைக்கப்படார்

ஜனாதிபதி திட்டவட்டம்

கொழும்பு,பெப்.25

ஒரு லட்சம் வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஆள்சேர்ப்பு செய்யப்பட்டவர்கள், சுகாதார சேவைகள் திணைக்களத்தில் உள்வாங்கப்பட மாட்டார்கள் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியுடன் இணைந்த தொழிற்சங்க சம்மேளனத்தின் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார் என்று ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஒரு லட்சம் வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டம் மிகக் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கி, அவர்களை வறுமையிலிருந்து விடுவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. முறையான கல்வி அல்லது தொழில்முறை தகுதிகள் அல்லது திறன்கள் இல்லாதவர்கள் மட்டுமே அந்தத் திட்டத்துக்கு ஆள்சேர்ப்பு செய்யப்படுவார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்களுக்கு மருத்துவமனைகள், பாடசாலைகள் மற்றும் பல்வேறு அரச நிறுவனங்களில் தொழிலாளர்கள், துப்புரவுப் பணிகளில் ஈடுபடும் ஊழியர்கள் மற்றும் இயந்திர இயக்குநர்களாக பயிற்சி அளிக்கப்படும். பயிற்சிக்குப் பின்னர், அவர்களுக்கு அந்தந்த நிறுவனங்களில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும். இருப்பினும், அவர்கள் சுகாதார சேவைக்குள் உள்வாங்கப்பட மாட்டார்கள் என்று ஜனாதிபதி தெளிவுபடுத்தினார். என்றுள்ளது. (க-இ)

## 3 இடங்கள் முடக்கம்

நாட்டில் மூன்று பகுதிகள் தொடர்ந்தும் முடக்கப்பட்டுள்ளன என்று கொரோனா தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயலணி தெரிவித்துள்ளது.

அதற்கமைய, கண்டி மாவட்டத்தின் பள்ளியாகொட்டுவ மற்றும் கல்ஹின்ன ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும், மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி 166 எ கிராம உத்தியோகத்தர் பிரிவும் தொடர்ந்து முடக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளது. (க-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இரட்சகரா இம்ரான்?

பாகிஸ்தானின் பிரதமர் இம்ரான் கான் இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். அவரது சுற்றுப் பயணத்தால் இலங்கையில் பூதாகரமாகியிருக்கும் ஜனாஸா எரிப்பு விவகாரம் தீர்க்கப்படும் என்று முஸ்லிம் மக்கள் பலரும் சிறுநம்பிக்கையைக் கொண்டிருந்தனர். அதனாலேயே இம்ரான் இலங்கையில் கால் வைத்த போது, கொழும்பில் ஜனாஸா விவகாரத்தை முன்வைத்து ஆர்ப்பாட்டமொன்றும் இடம்பெற்றிருந்தது. ஆயினும் ஜனாஸாக்களின் மீட்பராக இம்ரானை மனதிற்கொள்ளும் நம்பிக்கை மெய்ப்படும் என்பது வெறும் கானல்நீரே.

முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் ஜனாஸாக்களை (சடலங்களை) அடக்கம் செய்வதுதான் அவர்களின் பண்பாடு மற்றும் மத நம்பிக்கை. ஆனால் கொரோனாவால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை வலிந்து எரித்து வருகின்றது இலங்கை. அடக்கம் செய்தால் நிலத்தடி நீரில் கொரோனாக் கிருமி பரவி, அது மீண்டும் எமக்குத் தொற்றிக்கொள்ளும் என்பதுதான் இலங்கையின் வியாக்கியானம். ஆனால், அவ்வாறு பரவுவதற்குச் சாத்தியம் இல்லை என்கின்றது சர்வதேச விஞ்ஞானம். எனினும், சிறுபான்மையினரின் உரிமைகளைப் பகடையாக்கி தன் இருப்பையும், அரசியலையும் தீர்மானிக்கும் கொழும்பு, ஜனாஸா விவகாரத்திலும் உடும்புப் பிடியைத்தான் கைக்கொள்கின்றது.


இத்தகையதொரு பின்னணியில் இம்ரானின் வருகை, இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு நீதியை வழங்கும் என்ற எதிர்பார்ப்பு நியாயமானதுதான். ஆனால், அது மெய்ப்படுவதற்கான சாத்தியங்கள் தொலைதூரம் வரையில் இல்லவேயில்லை. காரணம், இம்ரான் கான் இலங்கைக்கு ஒரு முஸ்லிம் பிரதிநிதியாக வரவில்லை. அவர் ஓர் இஸ்லாமிய நாட்டின் தலைவராக இருக்கலாம். ஆனால் அவர் இங்கு வந்துள்ள நோக்கம் முழுக்கமுழுக்க பூகோள அரசியல்தான்.

இலங்கையில் நடைபெற்ற இறுதிப்போரின்போது இடம்பெற்றவை என்று கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை இறுக்கமான போக்கை இம்முறை கைக்கொள்ளவுள்ளது என்று தெரிகின்றது. இந்தியாவும் இம்முறை சர்வதேசத்தின் பக்கமாக நின்று இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவே எத்தனிக்கும் என்பது குன்றின் மேலிட்ட விளக்கைப் போன்று பகிரங்கமானதே. இதனால் தன் ஆதரவு நாடுகளை ஓரணியில் திரட்ட வேண்டிய தேவை இலங்கைக்கு உள்ளது.

இத்தகையதொரு பின்னணியிலேயே இம்ரானின் இலங்கைப் பயணம் அமைந்துள்ளது. அத்துடன், இந்தியாவுக்கு எதிரான போக்கைக் கடைப்பிடிக்கும் அதன் பரம எதிரியான பாகிஸ்தானுக்கும், இலங்கையின் ஆதரவு தற்போது தேவை. பாகிஸ்தான் இந்தியாவின் மற்றுமொரு பரம எதிரியான சீனாவின் நட்பு நாடும்கூட. ஆக, இந்தியா – மேற்கத்தேயக் கூட்டணிக்கு எதிராக, வலுவான ஆசியக் கூட்டணியொன்றை உருவாக்குவதற்கான ஒரு வியூகம்தான் இம்ரானின் பயணம். இந்த இடியப்பச் சிக்கல் நிலைக்குள் ஜனாஸாவைப் பேசுபொருளாக்கி இரு தரப்புக்களுக்கும் தர்ம சங்கடத்தை ஏற்படுத்த இலங்கையோ– பாகிஸ்தானோ விரும்பாது என்பதுதான் நிகழ்கால நிலவரம். அதுவே யதார்த்தமும்கூட.

ஐ.நா. சபையின் ஒவ்வொரு அமர்வின்போதும் ஈழத் தமிழர்களின் மீட்பர்கள் என்று தம்மைக்காட்டிக் கொள்ளும் நாடுகள் இதுவரையும் எந்த நடவடிக்கையை காத்திரமாகவும், வெற்றிகரமாகவும் முன்னெடுத்துள்ளன? அவர்களால் தமிழ் மக்களுக்குத் தீர்வைக் கொடுக்க முடிந்ததா?. இல்லையெனில் தமிழர் விடயத்தில் இலங்கைக்கு எதிரான நகர்வுகள் என்ன நோக்கத்துக்காக இதுகாலும் முன்னெடுக்கப்பட்டன?. இந்தக் கேள்விகளுக்கான பதில் தெரிந்துவிட்டால், இம்ரானின் வருகையின் நோக்கமும் தெரிந்துவிடும்.

சுருங்கக்கூறின், இதுவொரு 'பூனை – சுண்டெலி' விளையாட்டு. இந்த விளையாட்டில் பாதிக்கப்படுவது என்னமோ வலுவில்லாத சுண்டெலிகளான அப்பாவி மக்கள் மட்டுமே.




நன்றி - நாமல் அமரசிங்க

# பாகிஸ்தான் இஸ்லாமிய நாடாயினும் பௌத்த சின்னங்களை பாதுகாக்கின்றது

## பிரதமர் மஹிந்தவுடனான சந்திப்பில் சூசகமாக சுட்டிக்காட்டிய இம்ரான் கான்


**கொழும்பு,பெப்.25**

**இலங்கையில் பௌத்த மதத்தைப் பின்பற்றுகின்ற மக்கள், எமது நாட்டுக்கு வருகை தர முடியும். இதற்கான முதல் அழைப்பை நான் இலங்கைப் பிரதமருக்கு விடுக்கிறேன் என்று பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தெரிவித்தார்.**

இலங்கைக்கு வருகை தந்துள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், பிரதமர் மஹிந்த ராஜபக்சவை அலரிமாளிகையில் நேற்று முன்தினம் மாலை சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். அதன் பின்னர் இணைய ஊடக சந்திப்பொன்றை நடத்தினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,
சீன - பாகிஸ்தான் பொருளாதார நடைபாதை வேலைத்திட்டமானது மத்திய ஆசியாவுக்கும் இலங்கைக்கும் முக்கியமானதாகும்.
எதிர்காலத்தில் மத்திய ஆசியாவுடனான பாகிஸ்தானின் தொடர்பு மூலம், இலங்கை எவ்வாறு மேலும் பயனடையலாம் என்பது பற்றி நாம் ஆராய்ந்திருக்கிறோம்.
எமது இரு நாடுகளும் பங்கரவாதம் எனும் பொதுவான பிரச்சினைக்கு முகங்கொடுத்த நாடுகள். மிக மோசமான பயங்கரவாதத்துக்கு 10 ஆண்டுகளாகபாகிஸ்தான்முகங்கொடுத்தது. அதேபோன்று இலங்கையும் 30 வருடங்கள் பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடியது. இலங்கையில் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவருவதில் பாகிஸ்தான் முக்கிய பங்காற்றியதை இந்த இடத்தில் நினைவுபடுத்துகிறேன்.
சுற்றுலாத்துறையின் மீது தங்கியுள்ள இலங்கையின் அபிவிருத்தி இதனால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. பயங்கரவாதம் உள்ள ஒரு நாட்டால் முன்னேற்றமடைய முடியாது. பயங்கரவாதம் உள்ள ஒரு நாட்டில் முதலீடுகளைச் செய்ய முடியாது.
பாகிஸ்தானில் பயங்கரவாதம் தலைவிரித்தாடிய 10 ஆண்டுகளில் சுற்றுலாத்துறையே இருக்கவில்லை. எந்தவிதமான முதலீடுகளும் பாகிஸ்தானுக்குக் கிடைக்கவில்லை. இப்போது நாம் இன்னுமொரு பொதுவான பிரச்சினைக்கு முகங்கொடுக்கிறோம். அது தான் கொரோனா வைரஸ். சுற்றுலாத்துறையில் தங்கியுள்ள இலங்கை போன்ற சகல நாடுகளும் இதனால் கடுமையாக பாதிக்கப்பட்டதை நாம் அறிவோம்.
இந்த நெருக்கடியான காலத்தில் அபிவிருத்தியடைந்த நாடுகள், எவ்வாறு அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு உதவலாம் என்று சிந்திப்போம்.
நான் இலங்கைப் பிரதமரை பாகிஸ்தானுக்கு வருமாறு அழைப்பு விடுக்கிறேன். உலகிலேயே மிகப் பெரிய பௌத்த புராதன சின்னங்களை பாகிஸ்தான் கொண்டுள்ளது.
40 அடி நீளமான 'உறங்கும் புத்தர்' எனும் உலகிலேயே மிகப் பெரிய பௌத்த புராதன சின்னத்தை நாம் அண்மையில் கண்டுபிடித்துள்ளோம். வடக்கு பாகிஸ்தான், கந்தாரா நாகரீகத்தின் மிக முக்கிய தளமாகும். இவற்றைப் பார்வையிட பாகிஸ்தானுக்கு வருகை தருமாறு இலங்கை மக்களை நான் அழைக்கிறேன். நாம் இப்போது பௌத்தர்களின் புனித தலங்களை இணைக்கும் 'பௌத்த பாதை' ஒன்றை வடிவமைத்து வருகிறோம். இதன் மூலம் பௌத்த மதத்தை பின்பற்றுகின்ற மக்கள் எமது நாட்டுக்கு வருகை தர முடியும். இதற்கான முதல் அழைப்பை நான் இலங்கைப் பிரதமருக்கு விடுக்கிறேன் - என்றார். (க-இ)

# கைதிகளை பார்வையிட புதிய வசதி

கொழும்பு,பெப்.25
சிறைகளில் உள்ள கைதிகளைப் பார்வையிட வருவோர்கள் திகதி மற்றும் நேரத்தை ஒதுக்குவதற்கு புதிய முறை திட்டமிடப்பட்டுள்ளது.
இந்த சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக சிறைசாலைகள் திணைக்களத்தின் www.prisons.gov.lk என்ற இணையத்தளத்துக்குப் பிரவேசித்து தகவல் அமைப்பு ஊடாக நாள் மற்றும் நேரத்தை ஒதுக்கி கைதிகளைப் பார்வையிட முடியும் என்று சிறைச்சாலை களின் ஆணையாளர் துஷார உப்புல் தெனிய தெரிவித்துள்ளார்.
(க-இ)



# வாகன இறக்குமதிக்கான தடை ஆண்டிறுதிவரை!



**கொழும்பு,பெப்.25**
**வாகன இறக்குமதிக்கான தடை, இந்த ஆண்டின் இறுதி வரை நடைமுறையில் இருக்கும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்தார்.**

ரூபாவுக்கான பெறுமதியின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்த அரசு மோசமான பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் தன்னிச்சையாக இந்த முடிவை எடுத்ததா என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நாடாளுமன்றில் கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த நிதி இராஜாங்க அமைச்சர், வாகன இறக்குமதிக்கு 2021 இறுதிவரை தடை தொடரும். ஆண்டின் இறுதியில் இந்த நிலைமை குறித்து மதிப்பாய்வு செய்யப்படும் - என்றார்.

கொரோனாத் தொற்றுக்கு மத்தியில் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் நடவடிக்கையாக, வாகனங்களை இறக்குமதி செய்வதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க அரசு கடந்த 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

## 23 நாள்களில் 4,732 பேருக்கு கொரோனா

கொழும்பு,பெப்.25
கொழும்பு மாவட்டத்தில் பெப்ரவரி முதலாம் திகதி முதல் 23 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 4 ஆயிரத்து 732 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது.

அத்துடன், கொரோனா வைரஸ் தாக்கத்தின் 2 ஆவது அலை மூலம் கடந்த வருடம் ஒக்ரோபர் 4 ஆம் திகதி முதல் பெப்ரவரி 24 ஆம் திகதி வரை கொழும்பு மாவட்டத்தில் 29 ஆயிரத்து 500 க்கும் மேற்பட்டோருக்கு கொரோனா வைரஸ் பரவியுள்ளது.

அதேவேளை, கொரோனாவால் கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவானோர் உயிரிழந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-44)

## 3,54,352 பேருக்கு இதுவரை தடுப்பூசி

கொழும்பு,பெப்.25
இலங்கையில் இதுவரை 3 லட்சத்து 54 ஆயிரத்து 352 பேருக்கு கொவிட் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என்று கொவிட் பரவல் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவர் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்திலிருந்தே அதிகளவான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். நாட்டில் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைவாக தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.25
"கோப்பறேற்களும் மக்கள் அரசியலும்" என்ற தலைப்பிலான சமூக விஞ்ஞானப் படிப்பு வட்ட கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவை பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் சிறப்பு உரையை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மூத்த விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமர் ஆற்றவுள்ளார். தொடர்ந்து கருத்துப் பகிர்வும் இடம்பெறும்.

ஆர்வமுள்ள அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ஐ)

## கொரோனாத் தகவல்களைப் பெற தனி மத்திய நிலையம் அவசியம்

### மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு,பெப்.25
நாட்டில் கொரோனாத் தொற்று தொடர்பான அனைத்துத் தகவல்களையும், ஆலோசனைகளையும் ஒரே மத்திய நிலையத்தின் மூலம் பொதுமக்களுக்கு வெளியிட, ஒரு பொறி முறையை அமைக்க வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சங்கத்தின் துணைத் தலைவர் மருத்துவர் சண்டிக எபிடகடுவ இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது,

தற்போது, இதுபோன்ற செயன்முறை இல்லாததால், பொது மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை , கொரோனாத் தொற்றால் மரணிப்போர் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டவர்கள், தனிமைப்படுத்தலிருந்து குணமடைந்தோர் போன்ற தரவுகளை ஒரே மத்திய நிலையத்தின் மூலம் வெளியிட வேண்டும்- என்றார். (க-இ)

## உலக சாதனை படைக்க இலங்கை அரசு திட்டம்

கொழும்பு,பெப்.25
குறுகிய காலத்துக்குள் 14 மில்லியன் மக்களுக்குத் தடுப்பூசி செலுத்தி, உலக சாதனை படைக்க இலங்கை திட்டமிட்டுள்ளது என்று இணை அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

10 மில்லியன் ஒக்ஸ்போர்ட்அஸ்ராஜெனெகா தடுப்பூசியை இந்தியாவின் சீரம் நிறுவனத்திடம் இருந்து 52.5 மில்லியன் ரூபா செலவில் கொள்வனவு செய்யவுள்ளோம். கோவக்ஸ் திட்டத்தின் கீழ் 3.5 மில்லியன் டோஸ் தடுப்பூசியைக் கூடுதலாகப் பெறுவோம். அவை மக்களுக்குச் செலுத்தப்படும்.

தடுப்பூசி முன்னுரிமை பட்டியலைப் பின்பற்றாமல் தனிப்பட்ட தொடர்புகளின் அடிப்படையில் பல இடங்களில் பலருக்குத் தடுப்பூசிகள் வழங்கப்பட்டன என்று பல குற்றச்சாட்டுகள் எழுந்தன. அவை உண்மையில்லை என்றார். (க-இ)

## கஞ்சா நுகர்ந்த சிறுவர்கள் கைது

கிளிநொச்சி,பெப்.25
கஞ்சா போதைப் பொருளை நுகர்ந்துகொண்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டில் சிறுவர் இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

மருதங்கேணி பகுதியில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இவர்கள் பளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் இருவரும் 16 வயதுடையவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)



வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தனவை, பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஷா மஹ்மூத் குரேஷி வெளிநாட்டு அமைச்சில் நேற்றுச் சந்தித்தார். இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை மேலும் மேம்படுத்துவது குறித்து இரு தரப்பினரும் சந்திப்பில் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். (க-இ)

## 18 நாடுகளை இலங்கை வளைத்துப்போட்டுள்ளதாம்

கொழும்பு, பெப். 25
ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையின் அமர்வின்போது இலங்கையை ஆதரித்துப் பேசுவதற்கு 18 நாடுகள் உறுதியளித்துள்ளன என அரசின் உயர் வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த நாடுகளின் உயர் மட்டப் பிரிவு, இலங்கை அரசின் நிலைப்பாட்டை ஆதரித்து தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும்.

இந்த 18 நாடுகளில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையில் உறுப்பினர்களைக் கொண்ட நாடுகளும் உள்ளடங்குவதுடன் அவை இலங்கைக்கு ஆதரவாக இருக்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.இ)

## இருவழி பாதையாக சாவ- புலோலி வீதி

சாவகச்சேரி, பெப். 25
ஒரு லட்சம் கிலோ மீற்றர் வீதி சீரமைப்புத் திட்டத்தின் கீழ் தென்மராட்சி, வடமராட்சி இணைப்பு வீதியான சாவகச்சேரி தொடக்கம் புலோலி வீதியில் கனகம்புளியடி. புலோலி வீதி இருவழிப் பாதையாக அமைக்கப்படவுள்ளது.

சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் குறித்த வீதியை இருவழிப் பாதையாக மாற்றுவதற்குத் தேவையான காணிகளை வழங்க மக்கள் முன்வந்தனர். 20 கிலோ மீற்றர் நீளமான சாவகச்சேரி புலோலி வீதி தலா மூன்று கிலோ மீற்றர் தூரம் வரை கட்டம் கட்டமாக சீரமைக்கப்படவுள்ளது. (ப-9)

## மாவட்ட செயற்பாட்டு குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.25
மூன்றாம் நிலை, தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் பயிற்சித் துறையை அபிவிருத்தி செய்வதற்கான மாவட்ட செயற்பாட்டுக்குழுக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாண மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# முஸ்லிம் தலைவர்களை இம்ரான் சந்திக்கவில்லை

## காரணம் கூறுகிறார் கெஹலிய

**கொழும்பு,பெப்.25**

**இலங்கை முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களை, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் ஏன் சந்திக்கவில்லை என்ற காரணத்தை அமைச்சரவை செய்தித் தொடர்பாளர் கெஹலிய ரம்புக்வெல்ல தெளிவுபடுத்தியுள்ளார்.**

இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் அனைத்து இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாட் பதியுதீன் ஆகியோர், பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானைச் சந்திக்க இருந்தனர்.

இந்த நிலையில் பாதுகாப்பு அடிப்படையில் சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டது. அரசியல் ரீதியான காரணங்களுக்காக இந்தச் சந்திப்புக்களை இரத்துச் செய்வதற்குத் தீர்மானிக்கப்படவில்லை.

இந்த முடிவு அரசால் எடுக்கப்படவில்லை. பாகிஸ்தான் பிரதமரின் வருகை தொடர்பான முடிவுகள் இரு நாடுகளிலிருந்தும் அரசியல் ஆலோசனைக் குழுக்களால் எடுக்கப்படுகின்றன. இதில் அரசுக்குத் எந்தத் தொடர்பும் இல்லை.

வருகை தரும் பிரமுகர் மற்றும் கூட்டங்களுக்கு முன்மொழியப்பட்ட இடங்கள் தொடர்பான பாதுகாப்பின் அடிப்படையில் பெரும்பாலான முடிவுகள் எடுக்கப்படுகின்றன, என்றார். (க-இ)

# 'பொ-பொ' பேரணி; அராஜகம் அதிகரிப்பு

## அமெரிக்கத் தூதுவருக்கு எடுத்துரைத்தது கூட்டமைப்பு

கொழும்பு, பெப்.25

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டம் நடந்து முடிந்த பின்பு, நாடாளுமன்றஉறுப்பினர்கள், பிரதேசசபைத் தவிசாளர்கள் மற்றும் பொதுமக்கள் போன்றோரை இந்த அரசு விசாரணை என்ற போர்வையில் அச்சுறுத்தி வருவது தொடர்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்பிலிட்ஸ்க்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார். இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்பிலிட்ஸ்க்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நேற்று கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி. கே. சிவஞானம் ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

கலந்துரையாடல் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

அண்மையில் அம்பாறையில் உகுண பிரதேசத்தில் பிரபாகரனை நான் கொன்றேன் என்று ஜனாதிபதி கோத்தாபய சொன்னதே மனித உரிமை மீறலுக்கான பெரிய சாட்சியம். அதைவைத்தே அவர் மீது நடவடிக்கை எடுக்க முடியும் என அமெரிக்க தூதுவர் அலைனா டெப்பிலிட்ஸிடம் வலியுறுத்தியுள்ளோம்.

கடந்த 2009 ஆம் ஆண்டு போர் நிறைவடைந்த சந்தர்ப்பத்தில் இலங்கையில் பாதுகாப்புச் செயலாளராகப் பணியாற்றிய தற்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, இராணுவத்தினரிடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்களைக் கொலை செய்தேன் என ஒப்புக் கொண்டார் என்று போர்க்குற்றங்கள் மற்றும் உலகளாவிய குற்றவியல் நீதிக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் ஸ்டீபன் ராப் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறான விடயங்களை சாட்சியமாக வைத்து நடவடிக்கை எடுக்க முடியும் என அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்பிலிட்ஸிடம் சுட்டிக் காட்டியுள்ளோம்- என்றார். (ப-20)



# மாணவர்களுக்கு தொற்று நீக்கிகள்

மன்னார், பெப் 25

மன்னார் மெசிடோ நிறுவனத்தால், மன்னார், கிளிநொச்சியைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு கொரோனாத் தொற்று நீக்கிகள் வழங்கப்பட்டன.

குறித்த நிறுவனத்தின் கிளிநொச்சி மாவட்டக் காரியாலயத்தால் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முழங்காவில் ஜெயபுரம் மற்றும் கிராஞ்சி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும், மன்னார் கல்வி வலயத்துக்குட்பட்ட தேவன்பட்டி, வட்டக்கண்டல், தற்சனாமடு ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் இவ்வாறு சுகாதார மற்றும் கிருமித் தொற்று நீக்கிகள் வழங்கப்பட்டன. (ப-213)

கொரோனாத் தொற்று

# மேலும் ஒரு பாடசாலை தென்மராட்சியில் பூட்டு

சாவகச்சேரி பெப். 25

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மேலும் ஒரு பாடசாலை மூடப்பட்டுள்ளது.

அங்கு கற்பிக்கும் ஆசிரியை ஒருவரின் பேர்த்தியாருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து பெற்றோரின் வேண்டுகோளின் பிரகாரம் பாடசாலை மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரணப் தரப் பரீட்சை மார்ச் முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் கொரோனாத் தொற்றுப் பரம்பல் காரணமாக பாடசாலைகள் மூடப்படுவது குறித்து பெற்றோர் கவலை தெரிவித்தனர்.

இதேவேளை சாவகச்சேரி சுகாதார பகுதியினரின் ஏற்பாட்டில் பாடசாலை முழுவதும் நேற்று தொற்று நீக்கம் செய்யப்பட்டது. (ஐ-9)

# 12 பேர் கைது



கொழும்பு,பெப்.25

தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிச் செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் கடந்த 24 மணித்தியாலத்தில் 12 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, கடந்த ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில், தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறி செயற்பட்ட குற்றச்சாட்டில் 3 ஆயிரத்து 222 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 3 ஆயிரத்து 150 பேருக்கு எதிராக தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளின் அடிப்படையில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

# தென்மராட்சியில் காணிக் கச்சேரி

சாவகச்சேரி, பெப். 25

ஒரு லட்சம், பேரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தலா ஒரு ஏக்கர் காணி வழங்கும் செயற்றிட்டத்தின்கீழ் ஒரு ஏக்கர் காணிக்கு குறைவாக விண்ணப்பித்துள்ள தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட மக்களுக்கான காணிக் கச்சேரி நேற்று பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலர் முன்னிலையில் இடம்பெற்றது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் வதியும் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட காணி இல்லாதவர்கள் விண்ணப்பம் செய்திருந்தனர். இவர்களில் ஒரு ஏக்கருக்கு குறைவாக காணிக்கு விண்ணப்பித்தவர்களுக்கே நேற்று காணிக் கச்சேரி நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ப-9)

# விஞ்ஞானத்துக்கு முரணாக தடுப்பூசி வழங்கும் திட்டம்

## சமூக நல மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு



கொழும்பு,பெப்.25

இலங்கையில் கொரோனா தடுப்பூசி வழங்கும் திட்டம், அடிப்படை விஞ்ஞானக் கோட்பாடுகளுக்கு முரணாக இடம் பெறுகின்றது என்று இலங்கை சமூக நல மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

அந்தச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொவிட் 19 தடுப்பூசி தொடர்பில் தயாரிக்கப்பட்ட தேசிய தடுப்பூசி ஏற்றும் திட்டத்துக்கு, கடந்த ஜனவரி மாதம் தொற்றுநோய் தொடர்பான தேசிய ஆலோசனைக் குழு அங்கீகாரம் வழங்கி, உலக சுகாதார ஸ்தாபனம் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருக்கும் அனுப்பி வைத்துள்ளது. இந்த வருடத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான தடுப்பூசிகளே கிடைக்கும் என்ற அடிப்படையில், முன்னுரிமை பட்டியல் தயாரிக்கப்பட்டது. சுகாதார ஊழியர்கள், பாதுகாப்பு தரப்பினர், பொலிஸார், 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், வேறு நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள் மற்றும் பொருளாதார, அத்தியாவசிய சேவைகளில் அபாயத்தை எதிர்நோக்கியவர்கள் முன்னுரிமைப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்தனர்.

எனினும் தெரிவு செய்யப்பட்ட சில பிரிவுகளைச் சேர்ந்த 30 வயதுக்கும் 60 வயதுக்கும் இடைப்பட்டவர்களை இலக்காகக் கொண்டு தடுப்பூசி ஏற்றப்படுகின்றமை தேசிய தடுப்பூசி வழங்கும் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விஞ்ஞான ரீதியிலான இணக்கப்பாடுகள் மற்றும் முன்னுரிமை பட்டியலுக்கு முரணானது. எனவே விஞ்ஞான ரீதியிலான பரிந்துரைக்கு அமைவாக முன்னுரிமை பட்டியலுக்கு ஏற்ப, தடுப்பூசி வழங்கும் திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். என்றுள்ளது. (க-இ)

# 25ஆயிரத்து 229 வெடிபொருள்களை வடக்கில் இருந்து அகற்றியது 'ஸார்ப்'

## அதன் திட்டமிடல் முகாமையாளர் தெரிவிப்பு

**கிளிநொச்சி, பெப்.25**
**வடக்கு மாகாணத்தில் இருந்து இதுவரை 25ஆயிரத்து 229 அபாயகரமான வெடிபொருள்கள் 'ஸார்ப்' மனிதாபிமான கண்ணிவெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனத்தால் அகற்றப்பட்டுள்ளன என்று அந்த நிறுவனத்தின் திட்டமிடல் முகாமையாளர் தெரிவித்தார்.**



வடக்கு மாகாணத்தல் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றலில் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் ஈடுபடும் ஸார்ப் நிறுவனத்துக்கு தொடர்ந்தும் அதற்கான நிதிப்பங்களிப்புக்களை வழங்க ஜப்பான் அரசு முன்வந்துள்ளது.

இதற்கான ஒப்பந்தம் கடந்த பெப்ரவரி. 11 ஆம் திகதி ஜப்பானில் கைச்சாத்திடப்பட்டது.

இது தொடர்பில் ஸார்ப் நிறுவனத்தின் திட்டமிடல் முகாமையாளர் தெரிவித்ததாவது:

2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2021 பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலை மற்றும் ஆனையிறவிலும் 15 லட்சத்து 99ஆயிரத்து 5 சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து 25ஆயிரத்து 229 அபாயகரமான வெடிபொருள்கள் அகற்றப்பட்டுள்ளன.

மேலும் 2021 பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி இலங்கை இராணுவத்தினரோடும் தேசிய கண்ணிவெடி செயற்பாட்டு நிலையத்துடனும் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கு கண்ணிவெடி சம்பந்தமான அபாயக் கற்கை விழிப்புணர்வு நடத்தப்பட்டது. தொடர்ந்தும் இந்த நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலை பகுதியில் துரித கதியில் முன்னெடுத்து வருகின்றது என்றார். (ப-6)

# தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் மருத்துவமனையில்

சாவகச்சேரி பெப்25
தாக்குதலுக்கு உள்ளான நிலையில் நபர் ஒருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மிருசுவில் தவசிகுளத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு சாவகச்சேரி மருத்துவமனையில் நேற்று சேர்க்கப்பட்டார். குறித்த நபரை மதுவரித் திணைக்களத்தினர் தாக்கினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

இதேவேளை தவசிகுளம் பகுதியில் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி இடம்பெறுகின்றது என்று கிடைத்த தகவலையடுத்து மதுவரி நிலையத்தினர் அங்கு சென்று கசிப்பு உற்பத்தி நிலையத்தை முற்றுகையிட்டனர். அங்கு வந்த 30க்கு மேற்பட்டோர் அதிகாரிகளுடன் வாக்குவாதப்பட்டதுடன் அவர்களைத் தாக்க முற்பட்டனர் என்றும், அதனால் அங்கிருந்து வெளியேறிய மதுவரி நிலைய அதிகாரிகள் விசேட பொலிஸ் படையின் உதவியுடன் சென்றபோது, அங்கு நின்றவர்கள் தப்பியோடியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ப-9)

# அமுதவிழா

யாழ்ப்பாணம்,பெப்.25
யாழ்ப்பாணம் தனிநாயக அடிகள் ஆய்வு மன்றத்தின் ஏற்பாட்டில் வாழ்நாள் கலைஞர் வேல் ஆனந்தனுக்கான அமுதவிழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.45 மணி முதல் 5.45 மணி வரை திருமறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)



# சீரமைக்கப்பட்டு இரு ஆண்டுகளில் கடும் சேதமான முக்கொம்பன் வீதி

## கிளி. மாவட்டச் செயலருக்கு பொது அமைப்புகள் முறைப்பாடு

**கிளிநொச்சி, பெப்.25**
கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சீரமைக்கப்பட்ட ஸ்கந்தபுரம் முக்கொம்பன் வீதி சேதமடைந்துள்ளது என்று அந்தப் பகுதி பொது அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்னர் அக்கராயன் பிள்ளையார் கோவிலில் இருந்து கோணாவில் வரையான வீதியும், அக்கராயன் பிரதேச மருத்துவமனைச் சந்தியில் இருந்து அக்கராயன் அணைக்கட்டு வீதி வழியாக ஸ்கந்தபுரம், முக்கொம்பனை நோக்கி ஒரு கிலோமீற்றர் வரையான வீதியும் சீரமைக்கப்பட்டன. இவ்வாறு சீரமைக்கப்பட்ட ஸ்கந்தபுரத்தில் இருந்து முக்கொம்பன் நோக்கிய ஒரு கிலோமீற்றர் வீதி தற்போது பெரும் குண்டும் குழியுமாக மாறியுள்ளது. இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர், கரைச்சி பிரதேச செயலாளர் ஆகியோரிடம் முறைப்பாடு செய்துள்ளோம். எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றனர். (ப-13)



# கிளிநொச்சி மாவட்டத்தில் மணல் அகழ இடம் தெரிவு

**கிளிநொச்சி, பெப்.25**
கிளிநொச்சி அக்கராயன் ஆற்றுப் பகுதியில் மணல் அகழ்வு மேற்கொள்ளக்கூடிய இடங்களை கிளிநொச்சி மேலதிக மாவட்டச் செயலாளர் தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் ஆராய்ந்துள்ளனர். இதன்போது அக்கராயன் குளத்தின் அணைக்கட்டில் இருந்து ஒன்றரைக் கிலோமீற்றர் தூரத்தில் மணல் அகழ்வுக்கான இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டன.

இக்குழுவில் கனியவளத் திணைக்களம், வனவளத் திணைக்களம், பொலிஸார், கிராம அலுவலர்கள் அடங்கியிருந்தனர். மாவட்டச் செயலகத்தில் மணல் அகழ்வுக்கான அனுமதிகளுக்காக விண்ணப்பித்திருந்தவர்களுக்கு மணலுக்கான அனுமதிகளை வழங்குவதற்காகவே இக்குழுவினர் நேரில் சென்று மணல் அகழ்வு செய்யக்கூடிய இடங்களை ஆராய்ந்தனர். அக்கராயன் குளத்தில் இருந்து கண்ணகைபுரம் வரையான இடங்கள், மற்றும் குடமுருட்டி ஆகிய பகுதிகள் இக்குழுவால் ஆராயப்பட்டன. இதன்போது கண்ணகை புரத்தில் ஒன்றுகூடிய மக்கள் "மாவட்டச் செயலகத்தால் மணல் அகழ்வுக்குத் தெரிவு செய்யப்படும் இடங்களை விடவேறு இடங்களிலும் மணல் அகழ்வு கடந்த காலங்களில் நடைபெற்றுள்ளது. இவ்வாறு பிழையான முறையில் மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களுக்கு அனுமதிகள் வழங்கக் கூடாது. பொலிஸார் இறுக்கமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்" என்று தெரிவித்தனர். (ப-13)

# பாடசாலைக்கு தளபாடங்கள்



**கிளிநொச்சி,பெப்.25**
கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இல.2 பாடசாலையில் தரம் ஒன்று மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்கு தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி கல்வி கலாசார அபிவிருத்தி அமையம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பு என்பவை இணைந்து இத்தளபாடங்களை வழங்கியுள்ளன.

கிளிநொச்சி கரைச்சி கல்விக் கோட்டத்தில் தளபாட நெருக்கடிகளுடன் இயங்கும் பாடசாலையாக இப் பாடசாலை காணப்படுகின்றது. (ஐ-13)

# சிறுத்தையின் சடலம் மீட்பு



நுவரெலியா, பெப்.25
நுவரெலியா- ஹற்றன் பிரதான வீதியில் கொட்டகலை எல பொஜின் தேசிய உணவகத்துக்கு முன்னால் உள்ள மேபீல்ட் தேயிலை மலையில் சிறுத்தை ஒன்று நேற்று உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டது. சிறுத்தையின் சடலத்தை நல்லதண்ணி வனஜீவராசிகள் திணைக்களத்தினர் எடுத்துச் சென்றனர். (ப)

# பொ- பொ பேரணியால் அரசுக்கு பெரும் அச்சம்

## சுட்டிக்காட்டுகிறார் சிவில் அமைப்புக்களின் தலைவர்

மட்டக்களப்பு,பெப்.25

**பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணி மூலமாக, அரசுக்கு ஒரு அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது. பேரணி குறித்து அரசு மேற்கொள்ளும் விசாரணைகள் மூலம் இதனை எங்களால் விளங்கிக் கொள்ள முடிகிறது என்று சிவில் அமைப்புக்களின் இணைத்தலைவர் எஸ்.சிவயோகநாதன் தெரிவித்தார்.**

பேரணி தொடர்பில் மட்டக்களப்பு பொலிஸாரால் அவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணி சட்டத்துக்குப் புறம்பானது போலவும், இந்த நாட்டில் பெரும் குற்றம் நடைபெற்றிருப்பது போலவும் காட்டுவதற்காகவும், ஜனநாயக ரீதியில் போராடும் மக்களுக்கு ஒரு அச்சத்தை ஏற்படுத்தும் முகமாவும், ஜனநாயகக் குரல்வளையை நசுக்கும் சம்பவமாகவுமே இந்த விசாரணைகளை நாங்கள் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

இந்த நாட்டில் எமது மக்கள் நீண்ட காலமாகப் போராடுகின்ற விடயங்களுக்காகவும், இஸ்லாமிய சகோதரர்கள் மற்றும் மலையகத் தமிழர்களின் நியாயமான விடயங்களில் இந்த அரசு மேற்கொள்ளும் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளை எதிர்த்தும் நாங்கள் இந்தப் போராட்டத்தை நடத்தினோம்.

எத்தனை விசாரணைகள் நடைபெற்றாலும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை நடாத்தப்பட்ட மக்கள் பேரெழுச்சி இயக்கம், தொடர்ச்சியாக எமது மக்களுக்கான நீதியைக் கோரும் விதத்தில் பலதரப்பட்ட செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளது.

பொலிஸார் மூலமாக ஜனநாயக விரோதச் செயற்பாடுகளை மேற்கொண்டு மக்கள் மத்தியில் ஒரு அழுத்தத்தைப் பிரயோகித்து, அச்ச உணர்வை ஏற்படுத்தும் செயற்பாட்டை அரசு மேற்கொள்கின்றது. எனவே இது போன்ற செயற்பாடுகள் இனிவரும் காலங்களில் இடம்பெறக்கூடாது - என்றார். (க-இ)

# சந்தை வாய்ப்பை தவறவிடாதீர்கள்!

## உழுந்து உற்பத்தியாளர்களுக்கு சம்மேளனம் அறிவுறுத்தல்

வவுனியா,பெப்.25

உழுந்து இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் உழுந்துச் செய்கையாளர்கள் தமது உற்பத்திகளை உடன் சந்தைப்படுத்த வேண்டும் என்று வவுனியா மாவட்ட கமக்காரர் ஒழுங்கமைப்புக்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சம்மேளனம் மேலும் தெரிவித்த தாவது;

இலங்கை அரசாங்கம் உழுந்தின் கேள்வியைக் கருத்திற்கொண்டு இறக்குமதி செய்வதற்கான அனுமதியை இறக்குமதியாளர்களுக்கு வழங்கியுள்ளது. இறக்குமதியாளர்களால் விநியோகிக்கக்கூடிய உழுந்தின் உச்ச விலை 640 ரூபாவரை இருக்கலாமென அறியப்படுகின்றது. இதன் அடிப்படையில் எதிர்காலத்தில் உழுந்தின் சில்லறை விலை 750 தொடக்கம் 800 ரூபாவுக்கு இடைப்பட்டதாகவே இருக்கும். எனவே உழுந்தை சந்தைக்கு விடாது அதிக விலைக்கு விற்கக் காத்திருக்கும் விவசாயிகள் எதிர்காலத்தில் நட்டமடையக்கூடிய வாய்ப்புகள் உண்டு.

இதேவேளை விதை உழுந்துச் செய்கைக்காக விதையை, விதைகள் உற்பத்தித் திணைக்களத்தில் பெற்ற விவசாயிகள், மீள விதை உழுந்தை தரத்தின் அடிப்படையில் 870 ரூபா தொடக்கம் 920 ரூபா வரை குறித்த திணைக்களத்துக்கு விற்க முடியும்.

இதுவரை விதை உழுந்துக்கான தேவையின் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே கிடைக்கப் பெற்றுள்ளது எனவும், விதை உழுந்தை மீளச் செலுத்தாதவர்களுக்கான சலுகைகள் எதிர்காலத்தில் மட்டுப்படுத்தப்படும் என்பதனையும் குறித்த திணைக்களம் கவனத்துக்குக் கொண்டுவருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-110)



# நீதி கிடைக்காத நிலையில் உயிரிழந்த தாய்க்கு உறவுகள் அஞ்சலி

வவுனியா,பெப்.25

காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடி அலைந்தபோதும், அந்த மகன் குறித்த தகவல் கிடைக்காத நிலையில் சுகவீனம் காரணமாக உயிரிழந்த தாய் ஒருவருக்கு, வவுனியாவில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டறிந்து தருமாறு வலியுறுத்தி வவுனியாவில் தொடர் போராட்டத்தை முன்னெடுத்துவரும் உறவுகளால் அந்த அஞ்சலி முன்னெடுக்கப்பட்டது. வவுனியா வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு முன்பாக, போராட்டம் இடம்பெறும் பகுதியில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. வவுனியா மறவன்குளம் பகுதியைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை பேரின்பநாயகி என்ற தாய், கடந்த திங்கட்கிழமை உயிரிழந்தார். அவரது மகனான தருமகுலநாதன் கடந்த 2000 ஆம் ஆண்டு வவுனியாவில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டார். அவரைத் தேடி வவுனியாவில் ஆயிரத்து 465 நாள்களாக முன்னெடுக்கப்பட்டுவரும் சுழற்சிமுறைப் போராட்டத்தில் அந்தத் தாய் கலந்துகொண்டு தனது மகனைக் கண்டுபிடித்துத்தருமாறு கோரி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ப-110)

# தெற்கை நம்பியிராமல் யாழிலேயே சோதனை

## அமெரிக்கத் தூதுவரால் பல்கலைக்கு பி.சி.ஆர். இயந்திரம் அன்பளிப்பு



யாழ்ப்பாணம், பெப்.25

வடக்கின் கொரோனாத் தொற்றாளர்களை அடையாளம் காண்பதற்கு பி.சி.ஆர். பரிசோதனைக் கருவிகளின் வசதிகள் யாழ்ப்பாணத்தில்,குறைவாகக் காணப்பட்டதால், இங்கிருந்து சேகரிக்கப்படும் மாதிரிகளை அனுராதபுரம் மற்றும் தென்னிலங்கைக்கு அனுப்பி முடிவுகளைப் பெறவேண்டியிருந்த நிலையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு மற்றுமொரு பி. சி.ஆர் . இயந்திரம் கையளிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா பி ரெப்லிற்ஸ் அம்மையாரால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் அமைந்துள்ள பி. சி. ஆர் பரிசோதனை ஆய்வுகூடத்துக்கு நேற்றுமுன்தினம் அந்த இயந்திரம் கையளிக்கப்பட்டது. அந்த இயந்திரம் யு. எஸ். எயிட் நிறுவத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா பி ரெப்லிற்ஸ் அம்மையார் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரிடம் பி.சி.ஆர். இயந்திரத்தைக் கையளித்தார்.

நிகழ்வில், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா,யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் பேராசிரியர்கள், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் மற்றும் நிர்வாக அதிகாரிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம் தன்னிடமிருந்த ஒரேயொரு பி. சி. ஆர். இயந்திரத்தைக் கொண்டு, கடந்த வருடம் ஏப்ரல் மாதமளவில் பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்ள ஆரம்பித்தது. இதனால் வடக்கில் பெறப்பட்ட மாதிரிகளை இங்கேயே பரிசோதித்து, முடிவுகளை விரைவாகப் பெற்றுக் கொள்ள முடிந்தது. இதன் பின்னரே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பி.சி.ஆர். பரிசோதனை ஆய்வுகூட வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. தற்போது யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் உள்ள இரண்டு பி. சி. ஆர். இயந்திரங்களைக் கொண்டு நாளொன்றுக்கு சராசரியாக 300 மாதிரிகளைப் பரிசோதிக்கக்கூடிய வசதிகள் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ப-20)

# மாநகர சபைக்குள் புகுந்தது கொரோனா

மட்டக்களப்பு,பெப்.25

மட்டக்களப்பு மாநகரசபையின் பிரதான கணக்காளருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து, மாநகர சபையின் ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் 20 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அதனையடுத்து மட்டக்களப்பு மாநகரசபை மக்கள் சேவைகள் தற்காலிமாக இடைநிறுத்தப் பட்டுள்ளன.

அதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் முக்கவசம் அணிவதை கட்டாயமாக்கியுள்ள பொலிஸார். அது தொடர்பானசோதனை நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (க-இ)

# மேய்ச்சல் தரை வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு

மட்டக்களப்பு,பெப்.25

மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு, மாதவனைப் பகுதியில் மேய்ச்சல் தரை அபகரிப்பு தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரைப் பகுதியில் அத்துமீறிய நில அபகரிப்புத் தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே எதிர்வரும் மே மாதத்துக்கு வழக்கு விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டன.

மயிலத்தமடு, மாதவனைப் பகுதியில் மேய்ச்சல் தரைப் பகுதியில் உள்ளவர்கள் எதிர்வரும் 28ஆம் திகதி அங்கிருந்து வெளியேறிவிட வேண்டும் என்று அரசதரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

# வரலாற்றிலேயே அதிக நெல் இந்தப் பருவத்தில் அறுவடை

## விவசாயத்துறை அமைச்சர் தகவல்

**கொழும்பு,பெப்.25**

**நாட்டின் வரலாற்றிலேயே ஆகக்கூடிய நெல் அறுவடை இந்தப் பருவத்தில் கிடைத்துள்ளது. 32 லட்சம் மெற்றிக் தொன் நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளது என்று விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த வருடத்தில் 5 மில்லியன் மெற்றிக் தொன் நெல்லை உற்பத்தி செய்வதே அரசின் எதிர்பார்ப்பாக இருந்தது. அதிலிருந்து பெறப்படும் அரிசியின் அளவு 3 மில்லியன் மெற்றிக் தொன்களாகும்.

நாட்டின் வருடாந்த அரிசி நுகர்வு 25 இலட்சம் மெற்றிக்தொன் என்பதுடன், இந்த வருடம் அதிகமாக 5 லட்சம் மெற்றிக் தொன் அரிசி அதிகமாக எதிர்பார்க்கப்படுகிறது.

நெல் களஞ்சியப்படுத்துவதற்காக 323 புதிய களஞ்சியசாலைகளைப் புனரமைத்துள்ளோம். இதில் 3 லட்சத்து 25 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லைக் களஞ்சியப்படுத்துவதற்கான வசதி காணப்படுகின்றது .

அத்துடன் விவசாயிகளின் நெல்லைக் குறைந்த விலைக்குப் பெற்றுக்கொள்வதைத் தடுப்பதற்காகவும், விவசாயிகளையும், வாடிக்கையாளர்களையும் அரிசி மாபியாவிலிருந்து பாதுகாப்பதற்காகவும் நெல்லுக்கு உத்தரவாத விலையொன்றை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்துடன் மூன்று லட்சம் மெற்றிக் தொன் நெல்லை இருப்பில் வைத்திருப்பதன் மூலம், அரிசி மோசடிக் கும்பலைக் கட்டுப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (க-இ)

## பி.சி.ஆர். முடிவு கிடைக்க முன்னர் தப்பிச் சென்றவருக்கு கொரோனா

கொழும்பு,பெப்.25

எம்பிலிபிட்டிய மாவட்ட பொது மருத்துவமனையில் எடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவு கிடைப்பதற்கு முன்பே, மருத்துவமனையில் இருந்து தப்பிச் சென்ற நபருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து அவர் எம்பிலிபிட்டிய, நியூ டவுனில் உள்ள வீட்டில் இருந்தபோது கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். குட்டிகல் ஹோரகல, பதலங்கலப் பகுதியில் வசிக்கும் 26 வயதுடைய நபருக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

காய்ச்சல் காரணமாக குறித்த நபர் கடந்த 20 ஆம் திகதி எம்பிலிபிட்டிய மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

கடந்த 22 ஆம் திகதி அவர் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டார். இதையடுத்து முடிவு கிடைப்பதற்கு முன்னரே அவர் மருத்துவமனையில் இருந்து தப்பிச் சென்றுள்ளார்.

அவரது பி.சி.ஆர் அறிக்கை நேற்றுமுன்தினம் பிற்பகல் பெறப்பட்டது. அதில் அவருக்கு கொவிட் - 19 தொற்று இருப்பது கண்டறியப்பட்டது.

அவர் தற்போது கொவிட் சிகிச்சை மையத்தில் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் இருந்த வீட்டின் குடியிருப்பாளர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-இ)

# அரசு தனது பலத்தை பாதுகாக்க சிறுபான்மையினரை நசுக்குகிறது

## ஹக்கீம் குற்றச்சாட்டு

கொழும்பு,பெப்.25

அரசு தனது பலத்தைப் பாதுகாத்துக் கொள்ள சிறுபான்மைச் சமூகத்தின் மீது வன்முறைகளைத் தூண்டி விடுகிறது. அவர்களின் உரிமைகளை நசுக்குகிறது. எனவே எமது உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ள இறுதிவரை ஒன்றிணைந்து போராடுவோம்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகள் திட்டமிட்ட வகையில் மீறப்படுகின்றன.

வைரஸ் தாக்கத்தால் உயிரிழக்கும் முஸ்லிம் சமூகத்தினரது உடல்களை கட்டாயம் தகனம் செய்வோம் என்பதில் அரசு உறுதியுடன் நிற்கிறது.

உடல்களை அடக்கம் செய்யலாம் என்ற நிபுணர் குழுவின் அறிக்கையைக் கூட இனவாதம் மறைத்துள்ளது. இந்த அரசின் செயற்பாடுகள் கீழ்த்தரமான முறையில் காணப்படுகின்றன.

நாட்டில் தமிழ், முஸ்லிம் சமூகத்தினர் அரசின் இனவாதப்பிடியில் பெரும் நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளனர்.

இந்த விடயம் குறித்து சர்வதேச நாடுகள் அவதானம் செலுத்த வேண்டும்.

அரசின் பலவீனத்தன்மையையும், சிறுபான்மை சமூகத்தின் மீதான அடக்குமுறையையும் சர்வதேசம் தற்போது நன்கு அறிந்துள்ளது.

சர்வதேச அரங்கில் இலங்கையை நெருக்கடிக்குள்ளாக்குவது எமது நோக்கமல்ல. ஆனால் அரசு அவ்வாறான நிலைக்கு எம்மைக் கொண்டு செல்கிறது.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் உயிரிழக்கும் முஸ்லிம் சமூகத்தினரது ஜனாஸாக்களை அடக்கம் செய்ய அரசு அனுமதி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை மாத்திரம் முன்வைத்துள்ளோம். உடல்களை அடக்கம் செய்வதால் சுற்றாடலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்பதை மருத்துவச் சான்றுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

மருத்துவ நிபுணர்களின் அறிக்கையைச் செயற்படுத்துவதற்கு அரசின் இனவாதக் கொள்கை மாத்திரம் தடையாகவுள்ளது.

ஆகவே இனவாதக் கொள்கையைத் துறந்து பொதுத்தன்மையுடன் அரசு செயற்பட வேண்டும். உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் தொடர்ந்து போராடுவோம் - என்றார். (க-இ)

### பதவி விலகவில்லை

விவசாய அமைச்சின் செயலாளர் பதவியிலிருந்து தாம் இதுவரை விலகவில்லை என்று விவசாய அமைச்சின் செயலாளர், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுமேத பெரேரா தெரிவித்துள்ளார்.

விவசாய அமைச்சின் செயலாளர் பதவியிலிருந்து விலகுவதற்கான எண்ணம் தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி பி.வி. ஜயசுந்தரவிடம் கடந்த 15 ஆம் திகதி தெளிவுபடுத்தினேன். பதவி விலகல் தொடர்பில் இதுவரையில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## போலி மருத்துவர் கைது



கொழும்பு,பெப்.25

கண்டியில் சட்டவிரோதமான முறையில் இயங்கி வந்த மருத்துவ நிலையமொன்று பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது. அங்கு போலி மருத்துவராகக் கடமையாற்றிய பெண் கைதுசெய்யப்பட்டார்.

கண்டி போதனா மருத்துவமனையில் கடமையாற்றும் மருத்துவர் என்று தன்னை அடையாளப்படுத்தி, போலியான பதிவு இலக்கத்தைக் கொண்டு குறித்த மருத்துவ நிலையத்தை இவர் நடத்தி வந்துள்ளார்.

கைதுசெய்யப்பட்ட பெண், நீர்கொழும்பு மற்றும் மினுவாங்கொட பிரதேசங்களிலும் மருத்துவ நிலையங்களை நடத்தி வந்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தனது பதிவு இலக்கத்தில் மற்றொருவர் மருத்துவ நிலையம் நடத்தி வருகின்றார் என்று மருத்துவர் ஒருவர் கண்டி பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்தே, சந்தேகநபரான பெண் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (க-இ)

## ஜனாஸா அடக்கத்துக்கு

# அனுமதிக்கும் வரை போராட்டம் தொடரும்

## இம்ரான் உறுதி

கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களது ஜனாஸாவை அடக்க அனுமதி கிடைக்கும் வரை எமது போராட்டங்கள் தொடரும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் தெரிவித்துள்ளார்.

கட்டாய ஜனாஸா தகனத்துக்கு எதிரான தேசிய இயக்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு, ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிபுணர் குழு ஜனாஸாக்களை அடக்கம் செய்ய முடியும் என்று கூறிய பின்பும், அரசு அனுமதி தராதது கண்டனத்துக்குரியது. இதற்கான அனுமதியைப் பெற பல தரப்பினர் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால் இந்த அரசு வேண்டுமென்றே இதற்கான அனுமதியை மறுக்கிறது. பிரதமர் நாடாளுமன்றத்தில் அடக்கம் செய்ய அனுமதி அளிக்க முடியும் என்று கூறிய பின்பும், பிரதமரின் கூற்றைக் கூடப் பொய்யாக்கும் அரசின் நிலைப்பாடு பிரதமருக்குமேலே அரசை இயக்கும் இன வாத சக்தி உள்ளது என்பதற்கு சிறந்த உதாரணம். இந்த அரசு ஜனாஸாவை அடக்கம்செய்ய அனுமதி அளிக்கும் மனநிலையில் இல்லை என்பது இதன்மூலம் தெளிவாகிறது. ஆனால் அனுமதி கிடைக்கும் வரை எமது போராட்டங்கள் தொடரும் - என்றார். (க-இ)

## கணவரின் கொலையை மறைக்கிறார் சந்திரிகா

### குமாரதுங்கவின் சகோதரி புதுக்கதை

கொழும்பு,பெப்.25

இலங்கை ஜனாதிபதியாக சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இரண்டு முறை பதவி வகித்தபோதும், தனது கணவரை வீதியில் வைத்துக் கொலை செய்தது யார்? என்பதை அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை என்று கூறுவது ஒரு கட்டுக்கதை.

இவ்வாறு விஜய குமாரதுங்கவின் சகோதரி நொரயா ரூபா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். கணவரைக் கொலை செய்தது யார் என்று கண்டுபிடிக்கப்பட்டிருந்தால், சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அரசியலில் நுழைய முடியாது போயிருக்கும்.

எனினும், தமது கணவரின் கொலை தொடர்பில் விசாரிக்காததற்காக சந்திரிகா மீது எனக்கு எந்தவிதமான குறைகளோ, மனக்கசப்போ இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## வடக்கில் தொற்று அதிகரிப்பு;
# வவுனியா வர்த்தகர்களுக்கு பி.சி.ஆர். சோதனை தீவிரம்

வவுனியா,பெப்.25

**வவுனியா நகரிலுள்ள வர்த்தக நிலையங்களில் பணியாற்றும் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு இரண்டாவது தடவையாக நேற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.**

கடந்த ஜனவரி மாதம் வவுனியாவில் பட்டாணிச்சூரில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா சமூகப் பரவலையடுத்து வவுனியா நகரம் முடக்கப்பட்டு வர்த்தக நிலையங்களில் பணியாற்றியவர்களுக்கு கொரோனாப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் பலருக்கு தொற்று ஏற்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு தனிமைப்படுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள், தொடர்புபட்டவர்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் பணியாற்றுபவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் தற்போது வட மாகாணத்தில் ஏற்பட்டுள்ள கொரோனா பரவலையடுத்து மீண்டும் வவுனியா நகரிலுள்ள வர்த்தகர்களுக்கு தொற்று ஏற்பட வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. பொதுமக்களின் நன்மை கருதி பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைக்கு நகரிலுள்ள வர்த்தகர்கள் தமது பூரண ஒத்துழைப்புக்களை வழங்கி, சமூகத்தில் ஏற்படவுள்ள நோய்ப்பரவலைக் கட்டுப்படுத்த முன்வருமாறு கோரப்பட்டுள்ளது. (ப-110)



## கொரோனாவை விரட்ட சுழிபுரத்தில் வழிபாடு

யாழ்ப்பாணம்,பெப்.25

உலகெங்கும் வாழுகின்ற மக்கள் அனைவரும் கொரோனாத் தொற்றிலிருந்து விடுபட வேண்டி யாழ்ப்பாணம் சங்கானை சுழிபுரம் அருள்மிகு வீரபத்திரர் உடனுறை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு சிறப்பு வழிபாடு நடைபெறவுள்ளது.

சிறப்பு வழிபாட்டின் நிறைவில் ஆலய முதன்மைக் குரு சிவஸ்ரீ ஞானசம்பந்தக் குருக்களின் அருளாசி உரையும், வேதபாராயணமும் இடம்பெறவுள்ளன.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆலயங்கள் தோறும் இவ்வாறு சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன. (ஐ)

## மூதாட்டியுடன் தொடர்பு;
## தனிமைப்பட்டன 17 குடும்பங்கள்

சாவகச்சேரி, பெப்.25

கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட மூதாட்டியுடன் நேரடித் தொடர்பாளர்களெனக் கருதப்படும் 17 குடும்பங்கள் நேற்று சுகாதாரப் பகுதியினரால் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு, அவர்களுக்கு எழுமாறான பி.சி.ஆர். பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன

இதேவேளை தொற்றாளருடன் தொடர்புபட்டவர்கள் எனக் கருதப்படும் மேலும் சில கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ளவர்களைக் கண்டுபிடிக்கும் பணியில் சுகாதாரப் பகுதியினர் ஈடுபட்டு வருகின்றனர். (ப-9)

## கொட்டப்படும் குப்பைகளால் வீதிகளில் சுகாதார சீர்கேடு

சாவகச்சேரி,பெப்.25

சாவகச்சேரி நகரப் பகுதிகளில் வாகனங்களில் கொண்டு வந்து கொட்டப்படும் குப்பைகளால் அப்பகுதியில் உள்ள வீட்டு உரிமையாளர்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் .

சிறுவர் மற்றும் முதியோர் பயன்படுத்தும் பம்பேர்ஸ் உள்ளிட்ட கழிவுகளை பைகளில் கட்டி ஒரு சிலர் வீதியோரங்களில் வீசி வருகின்றனர். ஒவ்வொரு குடியிருப்பாளரும் தமது வீடுகளில் சேரும் உக்கக்கூடிய மற்றும் உக்காத கழிவுகளை தரம் பிரித்து வழங்குமாறும், அவ்வாறு தரம் பிரிக்காதோரின் குப்பைகள் சேகரிக்கப்படமாட்டாது என்றும் துண்டுப் பிரசுரங்கள் மற்றும் ஒலிபெருக்கி மூலம் நகரசபையால் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையிலும் வீடுகளில் குப்பைகளை தரம் பிரித்து வைக்கமுடியாத சிலர் அவற்றைச் சந்தைகளின் அயலிலும் வீதியோரங்களிலும் வீசிவிட்டுச் செல்கின்றனர்.

இவ்வாறு வீசப்படும் கழிவுகளை பறவைகள் மற்றும் கால்நடைகள் போன்றவை பைகளைக்கிழித்து வேறாக்குகின்றன. இதனால் பல இடங்களில் குப்பை பரவிக் காணப்படுவதால் சுகாதார சீர்கேட்டை எதிர்நோக்குகின்றோம் என பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

இது தொடர்பாக சுகாதார பகுதியினருடன் தொடர்புகொண்டு கேட்டபோது " வீதிகளில் கழிவுகளை வீசுவோரை அடையாளம் காண இரகசிய கண்காணிப்புக் கமெராக்கள் மூலம் பதிவுசெய்து அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் - என்றனர். (ஐ-9)

## சாவ. சந்தையில் மரக்கறிகள் வியாபாரத்துக்கு மேடைகள்
### *உள்ளூராட்சி திணைக்களம் நிதி ஒதுக்கீடு*

சாவகச்சேரி,பெப்.25

சாவகச்சேரி பொதுச்சந்தை மரக்கறி விற்பனை அலகுக்கு சிமெந்திலான மேடைகள் அமைத்து வழங்கப்படவுள்ளன, இதற்கென மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தால் 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சந்தை ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் சாவகச்சேரி சந்தை வியாபாரிகள் அனைத்து விற்பனை அலகுகளிலும் நிலத்தில் சாக்கு விரித்து தமது பொருள்களை விற்பனை செய்து வந்தனர். கலுணவுகள் விற்பனை அலகு தனங்களப்பு வீதியில் புதிதாக அமைக்கப்பட்டபோது சிமெந்திலான மேடைகள் அமைக்கப்பட்டன. அண்மை கொரோனாக் காலத்தில் சந்தை மூடப்பட்ட நிலையில் வியாபாரிகள் வெள்ளத்தில் வைத்து பொருள்களை விற்பனை செய்தனர். இதைச் சுட்டிக்காட்டி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி ஆகியோர் முறையிட்டதையடுத்து முதற்கட்டமாக மரக்கறி விற்பனை அலகுக்கு மேடைகள் அமைக்க சபையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தால். ஒதுக்கப்பட்ட நிதியில், ஒரு தொகுதி விற்பனை மேடைகள் அமைக்கப்படவுள்ளன. (ப-9)

## மரம் கடத்தியவருக்கு ரூ.50 ஆயிரம் தண்டம்

சாவகச்சேரி பெப்.25

அனுமதிப்பத்திரமின்றி மரம் கடத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட வாகனச் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்று 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

முழங்காவில் சிறாட்டிக்குளம் பகுதியிலிருந்து ஒரு லட்சத்து 53 ஆயிரம் ரூபா பெறுமதியான மரங்களை வாகனத்தில் அனுமதிப்பத்திரமின்றி கொண்டு வந்தார் என்று அவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டது. இந்தச் சம்பவம் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்றது. குற்றஞ்சாட்டப்பட்ட சாரதி பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில், நேற்றுமுன்தினம் மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது சாரதி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ப-9)

## 3 வயது மகளுடன் தாயும் தற்கொலை

கணவனுக்கும் மனைவிக்குமிடையே இடம்பெற்று வந்த வாய்த்தர்க்கம் உச்சமடைந்ததால் மனமுடைந்த மனைவி தனது மூன்று வயது மகளையும் கிணற்றுள் வீசி விட்டு தானும் கிணற்றில் குதித்து தற்கொலை செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் பிபிலையில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. பிபிலை நெல்லிவத்தைக் கிராமத்தைச் சேர்ந்த 24 வயது நிரம்பிய நதீகா பிரியங்கிகா மற்றும் அவரது மகளான மூன்று வயது நிரம்பிய கேஷா தேவமி ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளனர்.

தற்கொலை செய்து கொண்ட பெண்ணுக்கு உதவியாக இருந்து வந்த அயல்வீட்டுப் பெண் பொலிஸாருக்கு சாட்சியமளித்தார். இறந்த பெண்ணின் கணவன் இராணுவத்தில் கடமையாற்றுபவர். அவருக்கும், இறந்த பெண்ணுக்குமிடையே அடிக்கடி வாய்த்தர்க்கம் ஏற்படுவதுண்டு. சம்பவதினமிரவும் இருவருக்குமிடையே கையடக்கத் தொலைபேசி ஊடாக கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டிருந்ததை, இறந்த பெண் பேசிய தொனியிலிருந்து அறிய முடிந்தது. இதையடுத்து, அழுது கொண்டே அவர் தனது குழந்தையையும் தூக்கிக்கொண்டு சென்றார். மறுதினம் அவர்கள் சடலங்களாகவே மீட்கப்பட்டனர் என்று அவர் சாட்சியமளித்தார். (கு-இ)



## வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் விபத்து

கிளிநொச்சி, பெப். 25

கிளிநொச்சியில் இருந்து முல்லைத்தீவு நோக்கிப் பயணித்த கார் ஒன்று, வேகக் கட்டுப்பாட்டை இழந்து, மின்கம்பம் மற்றும் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு - பரந்தன் வீதியில் இடம்பெற்றது.

காரில் பெண் உட்பட மூவர் பயணித்த நிலையில் எவரும் எதுவித காயங்களின்றி தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளனர். கார் கடுமையான சேதங்களுக்கு உள்ளாகியுள்ளது. விபத்து தொடர்பான விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-19)

# இன்றைய நாள்





**மேடம்**: சவாலான வேலைகளை முடித்து வெல்வீர்கள். சலிப்பு நீங்கும். பெரிய பதவியில் உள்ளவர்களின் உதவி, ஆதரவு கிடைக்கும். நல்லவர் ஒருவர் துணை நிற்பார்.



**இடபம்**: பணியாளர்கள் உயர்நிலைக்கு வருவீர்கள். யோகம் வரும். பொழுது போக்குகளில் கவனம் செல்லும். வேதனைகள் தீரும். உங்களால் பயன் அடைந்தவர்கள் உதவி செய்வார்கள்.



**மிதுனம்**: முதலிடத்தைப் பிடிக்கும் முயற்சியில் இறங்குவீர்கள். மனதில் பலம் கூடும். வாழ்வில் புதிய பாடம் கற்பீர்கள். முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். பகைகள் விலகும்.



**கடகம்**: வியாபாரத்தை விரிவடையச் செய்வீர்கள். புகழ் கூடும். வாய்ப்புக் கிடைத்து உங்கள் திறமையை நிரூபிப்பீர்கள். கோபத்தை வென்று மகிழ்வீர்கள். புதிய பொருள் வாங்குவீர்கள்.



**சிம்மம்**: பழைய முறைகளை மாற்றுவீர்கள். பணியாளரின் கை ஓங்கும். பதற்றம் ஏற்படும் நேரத்திலும் அதையும் அமைதியாக கையாளுவீர்கள். நண்பர்களால் நன்மை உண்டாகும்.



**கன்னி**: : வீண் செலவுகள் குறையும். மனநிறைவு ஏற்படும். முயற்சியைப் பெருக்குவீர்கள். கடன் பிரச்னை கட்டுக்குள் இருக்கும். வெற்றி பெற எடுக்கும் முயற்சிகளில் பலன் கிடைக்கும்.



**துலாம்**: உரையாடல்களால் கூடுதல் நன்மை உண்டாகும். நல்லவர்கள் யார் கெட்டவர்கள் யார் என்று உணர்வீர்கள். பிறர் மீது குற்றம் காணும் குணத்தை விட்டுவிடுங்கள்.



**விருச்சிகம்**: வாழ்க்கைக்கு பயன்படும் நல்ல பாடம் ஒன்றைக் கற்பீர்கள். நெருங்கிய நண்பர் ஒருவருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். ஆலோசனை தரக்கூடிய ஒருவரின் உதவி கிடைக்கும்.



**தனுசு**: மற்றவர்கள் பழிக்கும்படியான செயல்களைச் செய்ய வேண்டாம். மற்றவர் வம்புக்குப் போய் சிக்கலில் மாட்ட வாய்ப்பு உள்ளது. மனதுக்குப் பிடித்த விஷயங்கள் மகிழ்வூட்டும்.



**மகரம்**: நல்ல அறிவுரைகளை மனப்பூர்வமாக ஏற்றுப் பயன்பெறுவீர்கள். உங்களை ஊக்கப்படுத்தும் செயலால் வெற்றி அடைவீர்கள். நேரத்தை வீணடிக்கும் செயல்களைத் தவிர்க்க வேண்டும்.




**கும்பம்**: உற்சாகத்தோடு பணி புரிவீர்கள். குடும்பத்தில் சுமை கூடும். கடன் சுமை குறைய உதவி கிடைக்கும். நல்ல செய்தி வரும். தள்ளிப்போன செயல் முடியும். விருப்பங்கள் நிறைவேறும்.



**மீனம்**: உங்களின் பணிகளை பிறரை நம்பி ஒப்படைக்க வேண்டாம். உறவினர்களின் பகை ஒரு சுப நிகழ்ச்சியில் தீரும். பிள்ளைகளை கண்டிக்கும்போது கடுமை காட்ட வேண்டாம்.

# பி.சி.ஆர்.சோதனை குறைவதால் தொற்றாளர்கள் குறைகின்றனர்

## சுகாதாரப் பரிசோதகர் சங்கம் தெரிவிப்பு



**கொழும்பு,பெப்.25**

**நாட்டில் பி.சி.ஆர்.பரிசோதனை குறைவடைந்து செல்வதால், கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் குறைவடைந்து செல்கிறது என்று இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் சங்கத் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளதாவது,

பி.சி.ஆர் பரிசோதனைகளின் எண்ணிக்கை அடிப்படையில்தான் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் தீர்மானிக்கப்படும். பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டமையால் கம்பஹா மாவட்டத்தில் மூன்று நாள்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கை குறைவடைந்தமையால், கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. இதனை வைத்து நாட்டில் தொற்றுப் பரவல் குறைந்துள்ளது என்று கணிக்க முடியாது. என்றார். (க-இ)

# தவக்கால சிந்தனை

## செயல்களே செபமாகட்டும்

மனித உறவின் நீட்சியும், உச்சமும், எல்லையும் இறை உறவாக மலர்கின்றபோது அந்த உறவின் அதிர்வுகளில்தான் பிரார்த்தனை பரிமாணம் பெறுகிறது. எனவே இறை விண்ணப்பம் என்பது குறிப்பிட்ட சூழ்நிலையில் அதை எதிர்கொள்ளும் எமது மனநிலையே ஆகும். பிரார்த்தனைக்கு மிகுதியான பிதற்றல்களோ, சொல்லடுக்குகளோ, மொழி வடிவமோ கூடத் தேவையில்லை. அனுபவப் பகிர்வே முக்கியம் பெறும். ஏனெனில் இறைவனின் மொழியென்பது மௌனத்தை விட வேறு ஏது?. ஆகவே, இறை வேண்டல் என்பது முழுக்கமுழுக்க மனநிலையே. இதற்கு ஆலயமோ, உதடுகளோ, நாவுகளோ கூட முக்கியமல்ல. மாறாக எமக்குள் தனிமையை, அமைதியை, ஒரு நிலைப்படுத்தலைக் கொண்டுள்ள இதயமே வேண்டும். அவரவர் இதயத்துக்குள் ஆலயத்தைக் காணாதவர் எந்தக் கோவிலிலும் தமது இதயத்தை, உள்ளத்தைக் காணவே முடியாது.

எமது வேண்டுதல்கள் எனப்படுபவை சுய ஆய்வு, மன்னிப்பு, பிறர் தேவை, இறையுறவு, தீர்க்கமான நல்ல தீர்மானங்கள், இறை சித்தத்தை ஏற்றுக்கொள்ளல், பகிர்வுத் தன்மைகள் மிக்கவையாக அமையட்டும். சொற்களை விட அன்றாட வாழ்வே இறைவனுக்கு உகந்த செபமாக மாறட்டும்.

**எஸ்.யேசுதாஸ்**
கொழும்புத்துறை





# பொலிஸாருக்கு ஓட்டோக்கள்!

## கொள்வனவுக்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு,பெப்.25

இலங்கை பொலிஸாருக்கென 2 ஆயிரம் முச்சக்கர வண்டிகளைக் கொள்வனவு செய்வதற்காக, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. பொலிஸார் தமது கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவதற்குப் போதுமான வாகனங்கள் இன்மை பெரும் குறையாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

# கொரோனாத் தொற்றாளர் எண்ணிக்கையில் வீழ்ச்சி

## இராஜாங்க அமைச்சர் தகவல்

கொழும்பு,பெப்.25

புதிதாக அடையாளம் காணப்படும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று கொரோனா ஒழிப்பு இராஜாங்க அமைச்சர் விசேட நிபுணர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஜனவரி இறுதி மற்றும் பெப்ரவரி முதல் வாரத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் 6.5 வீதமானோருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட போதிலும், தற்போது அந்த எண்ணிக்கை 4 அல்லது 4.5 வீதமாகக் குறைவடைந்துள்ளது. கடந்த நாள்களில் கொழும்புமாவட்டம்மற்றும்கொழும்பு நகரில் பெருமளவான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். எனினும் தற்போது அந்த நிலைமையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

மக்கள் பொறுப்புடன் செயற்படுவதால், நிலைமை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த வார இறுதிக்குள் 5 இலட்சம் கொரோனாத் தடுப்பூசிகள் கிடைக்கும். அவற்றை கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்ட மக்களுக்கு வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளோம். தடுப்பூசிகள் வழங்கப்படுவதால், தொற்றுப் பரவுவது குறைவடைந்துள்ளது என எண்ண முடியாது. - என்றார். (க-இ)

## யாழ். நூலகம் சென்றார் அமெரிக்கத் தூதுவர்

*மாநகர சபையினரையும் சந்தித்தார்*

யாழ்ப்பாணம், பெப்.25

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா பி ரெப்லிற்ஸ் அம்மையார் நேற்று யாழ்ப்பாணம் பொது நூலகத்தைப் பார்வையிட்டுள்ளார்.

நூலகத்தில், யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணனையும் அவர் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

குறித்த சந்திப்பில் யாழ் மாநகர சபையின் ஆணையாளர் உள்ளிட்ட சில உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்துக்கான பயணத்தை மேற்கொண்டுள்ள தூதுவர் பல தரப்பினரையும் தொடர்ச்சியாக சந்தித்துவரும் நிலையிலேயே நூலகத்துக்குச் சென்று, அங்கு மாநகர சபையினரைச் சந்தித்துள்ளார். (ப)

# வீரியம் கூடிய வைரஸாலேயே மன்னாரில் பாதிப்பு அதிகம்

**மன்னார், பெப். 25**

**மன்னாரில் கொரோனா தொற்றியவர்களின் உடல்களில் காணப்பட்ட வைரஸின் அளவு பெரியது என அனுமானிப்பட்டுள்ளது. இது மிகவும் ஆபத்தானது என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

மன்னார், மாந்தை மேற்கில் அடையாளம் காணப்பட்ட 24 பேரும் கடந்த வாரம் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள். இந்த மாதம் தொற்றோடு அடையாளம் காணப்பட்டவர்களுடைய உடலில் காணப்படும் வைரஸின் அளவு மிகவும் கூடுதலாக இருக்கும் என்று அனுமானிக்கப்படுகிறது. இதன் காரணமாகவே இவர்களின் குடும்ப உறுப்பினர்கள் பலர் இலகுவில் தொற்றடைந்திருக்கின்றார்கள். இந்த நிலமை மிகவும் பாரதூரமானது. எனவே பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைக் கண்டிப்பாக, இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

இதே நேரம் மார்ச், முதலாம் அல்லது இரண்டாம் வாரமளவில் கொரோனாத் தடுப்பூசி வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதற்கான விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகளும், தகவல்களைத் திரட்டும் நடவடிக்கைகளும் நடைபெற்று வரு...ன்றன.

முதற்கட்டமாக அறுபது வயத...க்கு மேற்பட்ட மற்றும், முப்பது வயு...க்கு மேற்பட்ட உழைக்கும் வர்க்கத்...னருக்கு கொரோனாத் தடுப்பூசி ...ங்கும் நடவடிக்கைகள் முன்னெ...கப்பட்டு வருகின்றன- என்றார். (ப-...3)

மதுபோதையில் சாரத்தியம்;

## நால்வருக்குத் தலா ரூ. 25,000 தண்டம்

யாழ்ப்பாணம்,பெப். 25

மதுபோதையில் வாகனம் செலுத்தினர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட நால்வருக்கு யாழ்ப்பாண நீதிவான் மன்றில் தலா 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், நீதிவான் நீதிமன்றில் நீதிபதி பீற்றர் போல் முன்னிலையில் நேற்றுமுன்தினம் வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இதன்போது குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் இவ்வாறு தண்டம் விதிக்கப்பட்டது. இதே வேளை மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து அவருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ப-319)

## பரீட்சையை கண்காணிப்போருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தவும்

*ஆசிரியர் சேவை சங்கம் கோரிக்கை*

கொழும்பு,பெப்.25



கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைக்கு முன்னதாக குறித்த பரீட்சை நடவடிக்கைகளில் ஈடுபடுவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக் கொடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது. இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை நடவடிக்கைகளில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்களும், உத்தியோகத்தர்களும், பங்கேற்கவுள்ளனர். தற்போது நிலவும் அபாயகரமான சூழலைக் கருத்தில் கொண்டு, ஆசிரி யர்கள், அதிபர்கள் மற்றும் ஏனைய ஊழி யர்களுக்கு கொரோனாத் தடுப்பூசியை பெற்றுக் கொடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-இ)

## தண்ட...

யாழ்ப்பாணம், பெ... 5
30 கிராம் ஹெரோ...ன்
போதைப் பொரு...ள
உடமையில் வைத்...ந்
தனர் என்ற குற்ற...ட்
டில் கைதுசெய்ய...ட
இருவருக்கு யாழ்ப்...ண
நீதிவான் மன்று ...
முன்தினம் தலா 7... ...பி
ரத்து 500 ரூபா தண்...ம்
விதித்தது.
சந்தேகநபர்கள் ...ற்
றத்தை ஒப்புக்கொ...ட
தன் அடிப்படையில் நீதி
வான் இவ்வாறு தண்டம்
விதித்தார். (ப-319)

பாகிஸ்தான் - இலங்கை

# கைச்சாத்திட்ட ஒப்பந்தங்களில் சுற்றுலாத்துறைக்கே முதலிடம்

கொழும்பு,பெப்.25

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட இருதரப்பு ஒப்பந்தங்களில் சுற்றுலாத்துறைக்கே முதலிடம் வழங்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

அவரது வருகையை முன்னிட்டு, இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த ஐந்து ஒப்பந்தங்கள் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டன.

கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களில் சுற்றுலாத்துறை, முதலீடு மற்றும் கல்வி உள்ளிட்ட விடயங்கள் முன்னுரிமைப் படுத்தப் பட்டுள்ளன.

பாகிஸ்தான் - இலங்கை இடையிலான சுற்றுலா ஒத்துழைப்பு,



இலங்கை முதலீட்டுச் சபைக்கும் பாகிஸ்தான் முதலீட்டு சபைக்கும் இடையிலான புரிந்துணர்வு, இலங்கை தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனம் (ஐ. டி. ஐ). மற்றும் பாகிஸ்தான் கராச்சி பல்கலைக்கழகம் இடையிலான புரிந்துணர்வு, கொழும்பு தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் இஸ்லாமாபாத்தின் பல்கலைக்கழகத்துக்கு இடையிலான ஒத்துழைப்பு, கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் பாகிஸ்தான் லாகூர் பொருளாதாரக் கல்லூரி ஆகியவற்றுக்கு இடையிலான புரிந்துணர்வு உள்ளிட்ட ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன என்று இலங்கைப் பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (க-இ)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 04 . 10 . 1959



இறப்பு 07 . 03 . 202

அமரர் சுப்பர் செல்வராசா

திதி : - திரியோதசி

வளர்த்தெடுத்து அறிவூட்டி ஆளாக்கி வைத்துவிட்டு
அவசரமாய் ஏன் அப்பா அவனிவிட்டு சென்றீர்கள்
ஆண்டுகள் ஒன்றானாலும் ஆயிரம்தான்
கடந்தாலும் ஆறாது எம் இதயம்

சங்குவேலி வடக்கு,
வாதனை லேன்,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

# ஜெனிவா விவகாரங்கள் தொடர்பில் நாடாளுமன்றில் இருநாள் விவாதம்

## கோருகின்றது எதிரணி

**கொழும்பு,பெப்.25**

**ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால், இலங்கை தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை, வெளிவிவகார அமைச்சரின் உரை உட்பட ஜெனிவா விவகாரங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் இரு நாள்கள் விவாதம் கோருவதற்கு எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.**

எனினும், இதற்கு அரசால் ஒரு நாள் மட்டுமே வழங்கப்படக் கூடும்.

இதற்கான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி முன்வைக்கும் என்று தெரியவருகின்றது.

அடுத்த நாடாளுமன்ற அமர்வின்போது இந்த விவா தத்துக்கான நேரம் ஒதுக்கப்படும்.

அதேவேளை, ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை தொடர்பிலும் எதிர்க்கட்சிகள் விவாதம் கோரியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (க-44)

## ஒரு மணித்தியாலத்துக்கு முன் பரீட்சை நிலையத்துக்கு வரவும்

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் பரீட்சை ஆரம்பிக்கும் நேரத்துக்கு ஒரு மணி நேரத்துக்கு முன்னர் பரீட்சை நிலையத்துக்கு வருகைதர வேண்டும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொவிட் 19 பரவல் காரணமாக சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளைக் கையாள வேண்டியுள்ளதால், பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு இந்த அறிவிப்பு விடுக் கப்பட்டுள்ளது.

பரீட்சை மண்டபத்துக்கு முன்னராக வருகைதந்து அனுமதி அட்டை, விண்ணபித்த பாடம், பாட இலக்கம் என்பவற்றை சரிபார்த்தல் வேண்டும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (க-இ)

**காணி விற்பனைக்கு**

நாயன்மார்கட்டில் செம்மணி வீதியில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**இரண்டு பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்**

**தொடர்பு: 077 288 0152, 077 505 8361**

## மரண அறிவித்தல்

**திரு.சுப்பிரமணியம் பாலச்சந்திரன் (சிவம்)**



கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும், கனடா ரொரன்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் நாகேஸ்வரி தம்பதியரின் மகன் சுப்பிரமணியம் பாலசந்திரன் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியை வியாழக்கிழமை (25.02. 2021) கனடாவில் நடைபெறவுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சுதுமலை கிழக்கு, மானிப்பாய்.**

**அன்புள்ள சகோதரர்கள் 021 225 6093**

## மூத்த தொழிற்சங்கவாதி உயிரிழப்பு

பதுளை, பெப்.25

மலையகத்தின் மூத்த தொழிற்சங்கவாதியும், பிரபல சமூக சேவையாளருமான கந்தன் பெரியசாமி தனது 73ஆவது வயதில் நோய்வாய்ப்பட்ட நிலையில் பதுளைப்பகுதியின் ரில்பொல - மொரகொல்லையிலுள்ள தமது இல்லத்தில் இயற்கை எய்தியுள்ளார்.

தோட்டத் தொழிற்சங்க கடமைகளுக்கு அப்பால், உணர்வுபூர்வமான சமூக சேவையாளராக சேவையாற்றிய பெரியசாமியின் இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு என்று தொழிற்சங்கவாதிகள் மற்றும் சமூகவியலாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ப)

## 40 விசேட பரீட்சை நிலையங்கள் ஏற்பாடு

கொழும்பு,பெப்.25

கொரோனாத் தொற்று அடையாளம் காணப்பட்ட க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காக, 40 விசேட பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. குறித்த விசேட நிலையங்களுக்கு தேவையான அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள் என்றும் பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்கு கொரோனாத் தொற்று பரவாமல் இருப்பதற்கான, நடவடிக்கைகளை எடுக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித் தெரிவித்தார்.

2020 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் மார்ச்10 திகதிவரை நடைபெறவுள்ளது. நாடு முழுவதும் 6 லட்சத்து 22 ஆயிரத்து 352 பேர் பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளனர். 4 ஆயிரத்து 513 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் தெரிவித்தார் (க-இ)



## சான்றிதழ் வழங்கல்

கொடிகாமம்,பெப்.25

தென்மராட்சி கோட்டமட்ட கூட்டுறவுச் சங்க கணக்குப் பகுதி பணியாளர்களுக்கான பயிற்சி நெறிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், வறுமையில் திறமை நிதியம் வழங்கலும் இடம்பெற்றன. இந்த நிகழ்வு தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்க தலைமைப் பணி மனையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திருமதி சியாமளா சண்முகலிங்கம் கலந்துகொண்டார்.

மேலும் 2019 ஆம் ஆண்டு க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்திபெற்ற சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகள் 26 பேருக்கு கல்வி ஊக்குவிப்பு நிதி வழங்கப்பட்டது. (ஐ-159)

## தடுப்பூசி ஏற்ற முண்டியடிப்பு

கொழும்பு,பெப்.25

நாரஹேன்பிட்டவிலுள்ள சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்துக்கு அருகில், கொரோனாத் தடுப்பூசிவழங்கப்படும் இடத்தில் நேற்றுக்காலை அமைதியின்மை ஏற்பட்டது.

கொரோனாத் தடுப்பூசியை பெற்றுக்கொள்வதற்காக பெருமளவானோர் ஒன்று திரண்டிருந்தனர்.

எனினும், குறிப்பிட்ட அளவான தடுப்பூசிகள் மாத்திரமே வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டதையடுத்து அங்கு அமைதியின்மை நிலவியது. அதனையடுத்து, சம்பவ இடத்துக்கு பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். (க-இ)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 24 . 07 . 1939

மறைவு 27 . 01 . 2021

**அமரர் கார்த்திகேசு முருகையா**

(சுழல்மேடை முருகையா)

கடந்த 27.01.2021 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம் கார்த்திகேசு முருகையா அவர்களின் வீட்டுக்கிரியைகள் (26.02.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் அன்னாரது ஆத்மா சாந்திபெற தாங்களும் வருகை தந்து கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி, துண்டுப் பிரசுரம் மூலம் துயர் பகிர்ந்தவர்களுக்கும் எம்மோடு எம் துயரில் பங்குபற்றிய அனைவருக்கும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**காளிகோவிலடி, மல்லாகம்.**

**குடும்பத்தினர். 0777 173 833**



# மஞ்சள் பதப்படுத்தும் முறை

திருமதி.அபிராமி சிவதாஸ்
விவசாயப் போதனாசிரியர்
மாகாண விவசாயத்திணைக்களம்

தற்பொழுது மஞ்சளுக்கான இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளதனால் அதற்கான விலை அதிகரித்துள்ளது. எனவே மஞ்சள் செய்கையை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் அப்பயிர்ச் செய்கையின் அறுவடைக்கு பின்னான தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சிகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

எனினும் மஞ்சள் பயிர்ச்செய்கையில் அறுவடை செய்யப்படும் கிழங்கு, உரிய முறையில் பதப்படுத்தப்படுவதனூடாக மஞ்சளுக்கான பெறுமதி அதிகரிக்கப்படும்.


**அறுவடை:**

- மஞ்சள்பயிரை நடுகை செய்து, 8 அல்லது 9 மாதங்களில் அறுவடையை மேற்கொள்ளமுடியும். எனினும் மஞ்சள் பயிரின் அறுவடை, மண் மற்றும் வளர்ச்சியின் தன்மை என்பவற்றைக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றது.
- அறுவடை செய்வதற்கு இரண்டு கிழமைக்கு முன்னர் நீர்ப்பாசனம் மேற்கொள்வது நிறுத்தப்படும். அதன் பின்னர் மஞ்சள் செடிகளின் இலைகள் மஞ்சள் தன்மை அடையும்போது அறுவடை செய்யலாம்.
- மஞ்சள் கிழங்கு, நிலத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படுவதனால் மிகவும் அவதானமாக கிழங்கு சேதமடையாமல் மண்வெட்டியால் அல்லது கைமுள்ளினால் அறுவடை செய்ய வேண்டும்.
- அறுவடை செய்யப்பட்ட கிழங்கை நீரினால் சுத்தமாகக் கழுவி கிழங்கிலிருந்து மண்ணை அகற்றுதல் வேண்டும். பின்னர் கிழங்கிலிருக்கும் சிறு வேர்களை வெட்டி அகற்ற வேண்டும்.
- பின்னர் மஞ்சள் கிழங்குகளை ஓரிடத்தில் ஒரு நாளைக்கு குவித்து வைத்தல் வேண்டும். இவ்வாறு குவித்து வைப்பதன் மூலம் அவற்றிலுள்ள நீர் வடிந்து செல்லும்.
- பெரிய பருமனில் காணப்படும் தாய்க்கிழங்குகளையும், சிறிய பருமனில் விரல் நீட்டங்கள் போல் காணப்படும் கிழங்குகளையும் வெவ்வேறாகப் பிரித்தெடுப்பது நடைமுறை. கிழங்குகள் தனித்தனியாக அவிக்கப்படல் வேண்டும். தாய்க்கிழங்குகளைஅவிப்பதற்கு 30 முதல் 45 நிமிடங்களும் விரல் கிழங்குகளை அவிப்பதற்கு 20 முதல் 30 நிமிடங்களும் எடுக்கும்.


**இருமுறைகளில் அவிக்கலாம்**

கொதி நீரில் அவித்தல்
நீராவியில் அவித்தல்

- கொதி நீரில் அவித்தல்: பானையில் தேவையான அளவு நீர் எடுத்து சூடாக்கவும். பின்னர் நீர் கொதிக்கும் போது கிழங்குகளை இட்டு நீராவி வெளியேறாதவாறு இறுக்கமாக மூடி அவியவிடவும்.
- நீராவியில் அவித்தல் : பிரஷர் குக்கர் ((Pressure cooker) அல்லது ஸ்டீமரைப் (Streamer) பயன்படுத்தி அவிக்கலாம்.
- மஞ்சள் வாசனை வெளிவரல், ஈர்க்கினால் குத்தும்போது ஈர்க்கு இலகுவாகக் உட்செல்லல், மஞ்சளை உடைத்துப் பார்க்கும் போது நூல் போன்ற இழை தென்படல் ஆகியவற்றைக் கொண்டு மஞ்சள் சரியான பதத்தில் அவிந்துள்ளதா? எனக் கண்டறியலாம்.
- அவித்த பின்னர் கிழங்குகளை உலரவைக்க வேண்டும். சூரிய ஒளியில் உலர வைக்கும் போது கிழங்கின் மேற்பரப்பில் சுருக்கங்கள் தோன்றும்.
- இதனை தவிர்ப்பதற்காக காலை 8 மணிமுதல் 11 மணி வரைக்கும், பின்னர் மாலை 3 மணி முதல் 5 மணி வரைக்கும் உலர வைக்கவேண்டும். மதிய வெயிலில் உலர வைக்கக்கூடாது. மதிய நேரம் உலர வைக்கும்போது தோல் பகுதி விரைவாக உலர்ந்து உள்ளே ஈரலிப்புக் காணப்படும்.
- உலர்த்தப்பட்ட மஞ்சளை வளைத்துப் பார்க்கும் போது வளையாமல் உடைந்தால் சரியான அளவில் உலர்ந்து உள்ளது என அறிந்து கொள்ள முடியும். உலர்வதற்கு 10 முதல் 12 நாள்கள் வரை எடுக்கும்.
- உலர வைக்கப்படுவதனால் மஞ்சள் கிழங்கின் மேற்பரப்பு கருமை நிறமாகக் காணப்படும். இக்கருமை நிறத்தைப் போக்குவதற்காக மெருகூட்டப்பட வேண்டும். மெரு கூட்டலை இரு முறைகளில் மேற்கொள்ளலாம்.
- பாரம்பரிய முறையில் கிழங்குகளை சிறு கற்களுடன் சேர்த்து சாக்குப் பைகளில் இட்டு நிலத்தில் அடிப்பதன் மூலம் அல்லது கரடு முரடான மேற்பரப்புள்ள பாத்திரத்தில் இட்டு தேய்ப்பதன் மூலம் கருமை நிறமான கடினமான தோல் ஊரோஞ்சப்பட்டு மஞ்சள் நிறம் வெளிப்படும்.
- மஞ்சளை மெருகூட்டுவதற்கு ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் ஓர் இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- மெரு கூட்டுவதன் மூலம் மஞ்சளுக்குரிய சிறந்த நிறத்தைப் பெற்றுக் கொள்ளமுடியும். பின்னர் அரைத்து தூளாக்கி பயன்படுத்திக் கொள்ள முடியும்.



காய வைத்த பின்னர்



மெருகூட்டப்பட்ட பின்னர்

## சுற்றாடல் குழுக் கூட்டம்

சாவகச்சேரி பெப். 25

தென்மராட்சி பிரதேச சுற்றாடல் குழுக் கூட்டம் எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி முற்பகல் 11 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றாடல் அமைச்சின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு அமைவாக பிரதேச சுற்றாடல் குழுவின் கட்டமைப்பு மற்றும். செயற்பாடுகள் குறித்து இக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதால், குழுவின் உறுப்பினர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் திருமதி உ.சுபலிங்கம் அறிவித்துள்ளார். (ப-9)

மிருசுவிலில் கொரோனாத் தொற்று:

## நெருங்கிப் பழகியவர்கள் எவருக்கும் தொற்றில்லை

கொடிகாமம், பெப். 25

மிருசுவில் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தோருக்கு கொரோனாத் தொற்று கண்டறியப்பட்ட நிலையில், அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்களை தனிமைப்படுத்தி கடந்த திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் எவருக்கும் தொற்று இல்லை என கண்டறியப்பட்டுள் ளது. இதன் காரணமாக தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்ட அனைவரும் நேற்றுக் காலை முதல் விடுவிக்கப்பட்டனர்.

எனினும் அவர்களை தொடர்ந்து சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றுமாறும், நோய் அறிகுறிகள் எதுவும் தென்படின் பிரிவு பொதுச் சுகாதார பரிசோதகரை தொடர்புகொள்ளுமாறும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அறிவித்துள்ளது. (ச-159)

## வாகன விபத்தில் இளைஞர் காயம்

சாவகச்சேரி,பெப்.25

சாவகச்சேரி நகரப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

கைதடி நுணாவிலைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ஐ-9)

உங்கள் மழலை
செல்வங்களின்
உயிரோவியமான
புகைப்படங்களுக்கு

# பேபி போட்டோ

போட்டோ அன் வீடியோ
BEBY PHOTO &VIDEO




கலர் பிறிண்டிங்
அல்பம்
கிறிஸ்டல் பிறேம்
லேசர் கட்டிங்
பிளாஸ்ரிக் ஐடி காட்
டி-சேட் பிறிண்டிங்
மக் பிறிண்டிங்
போட்டோ கொப்பி
லெமினேற்றிங்

91.பலாலி வீதி. திருநெல்வேலி 021 222 6912 . 0761419308



**பணியாளர் தேவை**

யாழ். உரும்பிராய் பகுதியில் இயங்கும் திருமண மண்டபத்திற்கு முகாமையாளர். துப்பரவு பணியாளர்கள். உதவியாளர்கள் தேவை.
தொடர்பு:
**021 221 2464, 077 460 2356**



**பாவித்த உபகரணங்கள் தேவை**

கட்டட நிர்மாணத்திற்குரிய பாவித்த நல்ல நிலையிலுள்ள உபகரணங்கள் (Concrete Mixer, Steel Jacks, Steel Pipe, Wheel barrow) என்பன உடன் தேவை.
**077 410 5294**


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் 35ஆவது பட்டமளிப்பு விழாவின் இரண்டாம் நாளாகிய இன்று (25.02.2021) **மருத்துவமானி** பட்டம் பெறுகின்ற வண்ணார்பண்ணையைச் சேர்ந்த எங்கள்



**கஸ்தனி இராசேந்திரம்**

அவர்களை இறையருளுடன் மேன்மேலும் சிறந்தோங்கி மேன்மையுற வாழ்த்துகின்றோம்.

" வாழ்க நலம், பலம், வளமுடன் "

*Best Wishes*

அன்புடன்:
**அத்தை, அப்பம்மா, குடும்பத்தினர், உறவினர்**
**இணுவில் மேற்கு, யாழ்ப்பாணம்.**

## ஆதனப்பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-18 காங்கேசன்துறை வீதி ஆதன இல 659 என்ற இலக்கத்தைக்கொண்ட ஆதனம் ஆதனவரிப்பதிவேட்டில் துளசி நாராயண ஐயரும் சுப்பிரமணிய ஐயரும் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிரசித்த நொத்தாரிசு இ.வசந்தசேனன் முகதாவில் 12414ம் இலக்க 26.02.2020ம் திகதியிடப்பட்ட பிரகடன உறுதி மூலம் சின்னராஜா சிவசுப்பிரமணியம் கைம்பெண் மகேஸ்வரி ஆகியவர் குறித்த ஆதனம் தனக்கு உரித்தானது என வெளிப்படுத்தியுள்ளார். மேலும் குறித்த உறுதியில் 1964ம் ஆண்டு தைமாதம் 3ம் திகதியில் இருந்து குறித்த ஆதனத்தில் வாழ்ந்து வருவதுடன் இதுவரை எவரும் உரிமையோ உரித்தோ கோரவில்லை எனவும் ஆட்சி சட்டம் பிரிவு 3இன் கீழ் குறித்த ஆதனத்தில் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக சுயமாக குடியிருந்தும் வருவதால் ஆட்சியும் உரிமையும் பெற்றுள்ளேன் என வெளிப்படுத்தியுள்ளார்.

ஆதன விபரம்:- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி காங்கேசன்துறை வீதி நல்லூர் கோவிற்பற்று வண்ணார்பண்ணை இறை பிரதேச செயலகம் நல்லூர் கிராம சேவையாளர் J/97 யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட "யட்டன் வளவு" நிலப்பரப்பு (2 1/2) இரண்டரையும் வீடும் எல்லைக் குள்ளிருக்கும் கிணறும் பயிர் வகைகளும் எல்லைகள்.

கிழக்கு:- கே.கே.எஸ். வீதி.
வடக்கு :- சுப்பிரமணியம் ரேவதியின் ஆதனம்.
மேற்கு :- எஸ்.பரராஜசிங்கத்தின் ஆதனம்.
தெற்கு :- சோமசுந்தரத்தின் ஆதனம்.
கிழக்கு :- கே.கே.எஸ். வீதி.
இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

தற்போது சின்னராசா சிவசுப்பிரமணியம் கைம்பெண் மகேஸ்வரி இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது சின்னராசா சிவசுப்பிரமணியம் கைம்பெண் மகேஸ்வரி என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

விஸ்வலிங்கம் மணிவண்ணன்
கௌரவ முதல்வர்
மாநகரசபை
யாழ்ப்பாணம்.

## ஆதனப்பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-17 கன்னாதிட்டி வீதி ஆதன இல 75 என்ற இலக்கத்தை கொண்ட ஆதனம் ஆதனவரிப்பதிவேட்டில் தம்பு குமாரசாமி என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையை நன்கு விபரிக்கப்படும் ஆதனத்தினை இராசா ராஜேஸ்வரன் பெண் லோகேஸ்வரி சுவிஸ்லாந்திலிருந்து தத்துவக்காரன் இராசா ராஜேஸ்வரன் மூலம் பிரசித்த நொத்தாரிசு A.பிரேமலிங்கம் முகதாவில் வரையப்பட்ட 82ம் இலக்க 18.09.2017ம் திகதியிடப்பட்ட அறுதி உறுதி மூலம் சிறிஸ்கந்தராசா என்பவருக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

குறித்த 82ம் இலக்க அறுதி உறுதியில் பிரசித்த நொத்தாரிசு A.பரமலிங்கம் முகதாவில் 08.02.2012ம் திகதி 14ம் மற்றும் 15ம் இலக்கங்களில் நிறைவேறிய நிறைவேற்றுனர் உறுதியும் வெளிப் படுத்தல் உறுதியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆதன விபரம்:- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கு இறை நல்லூர் பிரதேச செயலகம் J/99 கிராமசேவையாளர் பிரிவு யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட "அடியார் குணாளன் வயல்" உத்தரவு பெற்ற நில அளவையாளர் S.நிர்மலேந்திரன் 15.03.2013ம் திகதி 1364Dம் இலக்கத்தில் அளந்து வரைந்த நில அளவைப்படத்தில் துண்டுகள் 1 மற்றும் 2 எனச் சுட்டப்படுள்ள ஆதனம் 1ம் துண்டு குளிகள் 2.843.

**எல்லைகள்**
வடக்கு:- பொதுப்பகுதியும் கிணறும் 2ம் துண்டும்.
தெற்கு :- கன்னாதிட்டி வீதி
கிழக்கும் மேற்கும் :- இரா.லோகேஸ்வரியின் ஆதனம்.
2ம் துண்டு நெற்பரப்பு 0.566
**எல்லைகள்**
வடக்கு, கிழக்கு :- இரா.லோகேஸ்வரியின் ஆதனம்.
தெற்கு :- பொதுப்பகுதியும் இரா.லோகேஸ்வரியின் ஆதனமும் கன்னாதிட்டி வீதியும்.
மேற்கு :- பொதுப்பகுதியும் கிணறும்.
இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்

தற்போது முருகையா சிறிஸ்கந்தராசா இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப் பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற் குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதன மானது முருகையா சிறிஸ்கந்தராசா என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப் பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம். மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

விஸ்வலிங்கம் மணிவண்ணன்
கௌரவ முதல்வர்
மாநகரசபை.
யாழ்ப்பாணம்.

# மாபெரும் கவனவீர்ப்பு மார்ச் முதலாம் திகதி!

## அனைவரும் ஒன்றுதிரளுங்கள்

யாழ்ப்பாணம், பெப். 25

எதிர்வரும் முதலாம் திகதி யாழ்ப்பாணத்தில் பெரும் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம் என்று வடக்கு கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் அமைப்பினர் தெரிவித்தனர்.

இலங்கை அரசின் மனித உரிமை விடயங்கள் தொடர்பாக வெளிவந்துள்ள பலவீனமான முன்வரைவு மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு நீதி வேண்டியும், சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் ஒன்றினூடாக பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கவும் ஐ.நா. உறுப்பு நாடுகள் இதயசுத்தியுடன் செயற்பட்டு இலங்கை அரசு மீதான காத்திரமான நிலைப்பாட்டை சர்வதேசம் முன்னெடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று அவர்கள் தெரிவித்தனர்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

இது தொடர்பில் தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள், இலங்கை அரசின் மனித உரிமைகள் விடயங்கள் தொடர்பாக சர்வதேச நாடுகள் உறுதியான நிலைப்பாட்டை எடுத்து, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களான எமக்கு நீதிவேண்டி இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம். - என்று தெரிவித்தார்.

இந்தப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் சிவில் சமூக அமைப்புகள், தொழிற்சங்கங்கள், பல்கலைக்கழக சமூகத்தினர், பொது அமைப்புகள், பொதுமக்கள், தமிழ்த் தேசிய அரசியல் பிரதிநிதிகள் மற்றும் அதன் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (த-319)

# எமது மக்களுக்கு நீதி கிடைக்க அமெரிக்க அரசு உதவவேண்டும்

## இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரிடம் வலியுறுத்தினார் யாழ்.மாநகர முதல்வர்

யாழ்ப்பாணம், பெப். 25

எங்கள் மண்ணில் ஓர் இன அழிப்பு நடைபெற்றது என்பதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. எனவே இதனை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு கொண்டுசென்று அநீதி இழைக்கப்பட்ட எமது மக்களுக்கு நீதி கிடைப்பதற்கு அமெரிக்க அரசு உதவ வேண்டும் என்று யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா பீ.டெப்லிட்டிடம் வலியுறுத்தினார்.

இருதரப்பினருக்கும் இடையிலான சந்திப்பு, யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் நேற்று நடைபெற்றது. அதன்போதே மணிவண்ணன் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

ஜெனிவா தீர்மானங்களுக்கு கடந்த அரசு இணை அனுசரணை வழங்கியிருந்தது. ஆனால் அந்த அரசு அதை முன்னெடுக்கவில்லை. தற்போதைய புதிய அரசு அனைத்துத் தீர்மானங்களிலிருந்தும் வெளியேறியிருக்கின்றது. எனவே எங்களுடைய அரசியல் உரிமை தொடர்பான பிரச்சினைகள் தொடர்பிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைகள், நில அபகரிப்புகள், மற்றும் குருந்தூர் மலை, வெடுக்குநாறி கோவில்களை அபகரிக்கின்ற செயற்பாடுகள் தொடர்பிலும் அமெரிக்க அரசு கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் அதற்கான அழுத்தங்களையும் நடவடிக்கைகளையும் ஐ.நா. ஊடாக பல மட்டங்களில் முன்னெடுக்கவேண்டும் என்றும் மாநகர முதல்வர் அமெரிக்கத் தூதுவரிடம் கேட்டுக்கொண்டார்.

அண்மையில் தங்களுடைய பிரச்சினைகளை சர்வதேசத்துக்கு வெளிக்காட்டுவதற்கு தமிழ் மக்களால் பேரெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்ட பேரணியை முடக்குவதற்கு இலங்கை அரசு மேற்கொண்ட முயற்சிகள் தொடர்பாகவும் அதனை எவ்வாறு எதிர்கொண்டோம் என்பது தொடர்பிலும் அமெரிக்கத் தூதுவருக்கு முதல்வர் தெளிவுபடுத்தினார்.

இந்தச் சந்திப்பு மகிழ்ச்சிதருகிறது எங்களுடைய மக்கள் உங்கள் நாடு உட்பட பல நாடுகளில் பெருமளவில் வாழ்கின்றனர். அந்த மக்கள் சார்பாகவும் எங்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வுகாண அமெரிக்க அரசு உதவ வேண்டும் என்றும் முதல்வர் தூதுவரிடம் தெரிவித்தார்.

சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் தான் கரிசனை செலுத்துகின்றேன் என்று அமெரிக்கத் தூதர் கூறினார் என்றும் மணிவண்ணன் தெரிவித்தார்.

சந்திப்பில், யாழ்.மாநகர சபை ஆணையாளர், யாழ்.பொது நூலக பிரதம நூலகர் உட்படபலரும் கலந்து கொண்டனர். (த-26)


## உடனடி வேலைவாய்ப்பு

எமது தளபாட தொழிற்சாலைக்கு கீழ்வரும் பதவிகளுக்கு உடனடியாகப் பணியாளர்கள் தேவை.

1. தொழிற்சாலை பணியாளர்கள் ஆண்/பெண் வயது : 18-35
2. வெல்டிங் பணியாளர்கள் உதவியாளர்கள்
3. தச்சு தொழிலாளர்கள் உதவியாளர்கள்
4. அலுவலகப் பணியாளர்கள் (பெண்)

சம்பளம் ரூ. 13,500 - ரூ. 45,000

நேர்முகத் தேர்வு

27.02.2021 காலை 8.30 - 1.00

EUT (PVT) LTD

பலாலி றோட்,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு
புன்னாலைக் கட்டுவன்

தொடர்பு:

077 656 6873/021 224 0110

## வேலையாட்கள் தேவை

பெயின்டிங் வேலைக்கு
ஆட்கள் தேவை

077 760 7068

## கொள்வனவு

மில் தானிய வகைகள் கொள்வனவு செய்யப்படும்.

104, மாப்பியன் மில் சுதுமலை மானிப்பாய்.

தொடர்பு: 0777722215

## சேவைநலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்துக்களும்

யாழ்/கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் தனது ஆசிரியை பணியை தொடங்கிய



திருமதி
**கந்தையா சந்திராதேவி**
அவர்கள்

யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்,
யா/ நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்

ஆகிய பாடசாலைகளில் 21 வருடங்கள் ஆசிரியையாக சேவையாற்றி இன்று (25.02.2021) ஓய்வு பெறுகின்றமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். மற்றும் 60 ஆவது அகவை தினத்தை கொண்டாடும் கந்தையா சந்திராதேவி அவர்களுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்
சண்முகநாதன் குடும்பத்தினர்.
ஜீவிதன் குடும்பத்தினர், ராகுலன், டர்சிகா

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




யாழ் பல்கலைக் கழகத்தில் நடைபெறும் 35வது பட்டமளிப்பு விழாவில் இன்று (25.02.2021) பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டம் பெறும் அச்சுவேலி ஆரம்ப பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியை

**திருமதி ராகினி பார்த்தீபன்**

அவர்களை இறையருளுடன் மேன்மேலும் சிறந்தோங்கி மேன்மையுற வாழ்த்துகின்றோம்.

அன்புடன் வாழ்த்துவோர்:
குடும்பத்தினர்.

நெல்லியான் வீதி, சுழிபுரம்
மற்றும் நாவலம்பதி அச்சுவேலி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்தின் அங்கத்தவர்களாய் இருந்து யாழ்ப்பாண சர்வகலாசாலையின் 35வது பட்டமளிப்பு விழாவில் சமூகவியல் சிறப்புக் கலைமானியாக

**விஜயகுமார் விஜயலாதன்** அவர்களும்

அரசறிவியல் சிறப்புக் கலைமானியாக

**லோகநாதன் கட்சினி** அவர்களும்

மகுடம் சூடியிருக்கிறார்கள்.


இவர்களை எமது நிறுவனத்தின் சார்பாக உளமார பாராட்டுகின்றோம். பார்வையற்ற எம்மவர்களின் கல்வி முதலான சமூகப்பணிக்காக உதவும் எங்கள் உறவுகளே உங்கள் ஆதரவுக் கரங்களை தொடர்ந்து எதிர்பார்க்கின்றோம்.

வாழ்த்துக்கள்

யாழ் விழிப்புலனற்றோர் சங்க சமூகம்

## மரண அறிவித்தல்

தோற்றம்
22
.
10
.
1929



மறைவு
24
.
02
.
2021

### திரு.வேலாயுதம் கணபதிப்பிள்ளை

மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், இராசவீதி, கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.வேலாயுதம் கணபதிப்பிள்ளை நேற்று (24.02.2021) புதன்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம் குழந்தை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னட்டி நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான தெய்வானை, உமையாத்தை, மற்றும் சின்னமணியின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான இராசா, தம்பையா, பூரணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கருணேஸ்வரி, வரதலட்சுமி, காலஞ்சென்ற மகேந்திரலிங்கம் மற்றும் இராசலட்சுமி, பத்மாவதி, யோகலிங்கம், கணேசலிங்கம், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் லோகேஸ்வரி (அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி திணைக்களம், வடமாகாணம்) சந்திரலிங்கம் (உதவிக் கல்விப் பணிப்பாளர்-வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்), திலகேஸ்வரி (ஆசிரியை- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான திருச்செல்வம், இராசரத்தினம் மற்றும் புஸ்பராசா, பொன்னுத்துரை, கோமதி, நகுலேஸ்வரி, இராசேஸ்வரன், தாட்சாயினி, சசிகுமார் ஆகியோரின் அன்பு மாமனும், சிவரூபன், கபிராஜன், குபேந்திரன், துசிகரன், பகீரதன், தனுசா-டினேஷ், கிரிசாந்தன், பிரசாந்தன், துஷாந்தன், லோகசாந்தன், கஜா-கீர்த்தனன், கயரூபி, கஜேந்தினி, தர்சா, ஜதுசன், மகிசன், வினோஜன், கஜீபன், மிதுனன், தர்மிந்தன், பவநிதன், தாருஜன், நிலக்ஷனா, அபிசா, திசானா, ஆராதனா, ஆரதன், ஆதிரன், ஆருசன், யஸ்மிதன் ஆகியோரின் அன்புப் பேரனும், திரிஷிகன், அபிநயா, கர்ணிகா, ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2021) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோப்பாய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 125 1125

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
08
.
04
.
1948



ஆண்டவன் அடியில்
23
.
02
.
2021

### ஐயம்பிள்ளை தாமோதரம்பிள்ளை (ஆட்டோ மாமா)

வவுனியா பாவற்குளத்தைப் பிறப்பிடமாகவும், யாழ். சரவணையை வசிப்பிட மாகவும், இல 17A UC குவார்ட்டஸ் வவுனியா குருமண்காட்டை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை தாமோதரம்பிள்ளை (ஆட்டோமாமா) அவர்கள் 23.02.2021 செவ்வாய்க் கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை கண்மணிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், தவமணி அவர்களின் பாசமிகு கணவரும், சுகிதா ( ஜேர்மனி ), சுரேஸ் (அப்பன் - லண்டன் ), காலஞ்சென்ற சதீஸ் ஆகி யோரின் பாசமிகு தந்தையும், தவேந்திரன் (ஜேர்மனி), வித்தியாயினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான குலசேகரம், மனோண்மணி மற்றும் தங்கலட்சுமி, காலஞ்சென்ற பொன்மணி மற்றும் புஸ்பவதி, காலஞ்சென்றவர்களான ஆனந்தசிவம், எமில் பற்றிக் மற்றும் தெய்வேந்திரகுமார், மோகனாதேவி, வசுமதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், இராஜகோபால், சின்னராசா, அந்தோனிப்பிள்ளை, சிவபாக்கியம், கணபதிப்பிள்ளை மற்றும் இரத்தினசிங்கம், அமுதநாதன், கந்தசாமி, நவமலர், செல்வராணி, சிவமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிஷாந்தினி, கஜன், சோபிதன், தர்னிஷா, தரன்யா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2021) வியாழக்கிழமை மு.ப 10:30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் மு.ப 11:30 மணியளவில் பத்தினியார் மகிழங்குளம் இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இலக்கம் 17A, UC குவார்ட்டஸ்,
குருமண்காடு, வவுனியா.
தொடர்புகளுக்கு: (077) 604 1709

தகவல்:
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி மதிய போசன நிகழ்வு இடைநிறுத்தம்

**அமரர் சிதம்பரப்பிள்ளை கதிர்காமநாதன்**

வடமராட்சி பருத்தித்துறைப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக 28.02.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருந்த மதிய போசன நிகழ்வு இடைநிறுத்தப் பட்டுள்ளது என்பதை பணிவுடன் அறியத் தருகின்றோம்.

1ஆம் கட்டை, துலாவெட்டை,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவு நாள்



மலர்வு : 01.10.1937 உதிர்வு : 17.02.2018

### அமரர் கார்த்திகேசு பேரின்ப வேலுப்பிள்ளை

(ஓய்வுபெற்ற பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன உத்தியோகத்தர்)

பாசத்தின் உறைவிடமாய்
பண்பான எம் தந்தையாய்
அன்புடனும் அரவணைப்புடனும்
வளர்த்து ஆளாக்கிவிட்ட தெய்வமே
நேரிய வழிகாட்டிய குலவிளக்கே
பார்போற்ற வாழ்ந்த பண்பாளரே
மூன்றாண்டு சென்றாலும் ஆறிடுமோ எம் நெஞ்சம்
பரிதவிக்கின்றோம் அழியா நினைவுகளுடன் அப்பா

25.02.2021 இன்று வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.
இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

No.12, 2ம் பண்ணை, கனகபுரம்,
கிளிநொச்சி.

குடும்பத்தினர்.

## ஆதனப்பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-06, ஈச்சமோட்டை வீதி , வரி மதிப்பீட்டு இலக்கம் 17/1 எனும் ஆதனம் நாகலிங்கம் பேரின்பராசா பெண் ராஜினி என்ற பெயரில் ஆதனப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு காணப்படுகிறது.

இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனம் தொடர்பில் பிரசித்த நொத்தாரிசு திருமதி.லிங்கா துரைராஜா முகதாவில் 06.02.2019ஆம் திகதி 10932 இலக்கத்தில் ஓர் சீதன உறுதி நிறைவேற்றப்பட்டு யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை வீதி 17/1ம் இலக்கத்தைச் சேர்ந்த நாகலிங்கம் பேரின்பராஜாவும் பெண் ராஜினி பேரின்பராஜாவும் தமது மகளான குகனேந்திரராஜா மனைவி பிரணவாஜினிக்கு சீதனமாக வழங்கியுள்ளார்.

குறித்த 10932ம் இலக்க உறுதியின் தாயுறுதிகளில் ஒன்றாக 10917 இலக்க 31.12.2018 திகதியில் பிரசித்த நொத்தாரிசு லிங்கா துரைராஜா முகதாவில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி குறிப்பிடப்பட்டு இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனத்தில் குளிகள் ஒன்பது குறித்த வெளிப்படுத்தல் உறுதியில் வெளிப்படுத்தப்பட்டுள்ள காரணங்களின் பிரகாரம் குறித்த ஆதனம் நாகலிங்கம் பேரின்பராஜாவிற்கும் பெண் ராஜினி பேரின்பராஜாவிற்கும் சொந்தமானது என வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்:**

யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டிக்குளி இறை கிராம அலுவலர் பிரிவு J/66 யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேச செயலகம் யாழ்ப்பாணம் "முதலைக்குளம் வயல்" நிலப்பரப்பு 1 குளி 7.79 இது 1984.07.22திகதி நிலஅளவையாளர் பி.ரி.பரமபதி அளந்து தயாரித்த 228ம் இலக்கப்படத்தில் துண்டு 1 என அடையாளமிடப்பட்டுள்ளது. மேற்படி இறை "முதலைக்குளம் வயல்" குளி 9 (இதன்பரிவு V 76/01) இரு வகையாகவும் கூடிய மொத்த நிலப்பரப்பு 1 குளி 16.79 இது 2019.01.29ம் திகதி நில அளவையாளர் மெல்லின் ஞானப்பிரகாசம் அளந்து தயாரித்த 3391ம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 என அடையாளமிடப் பட்டுள்ளது. இதன் நிலப்பரப்பு 1குளி 16.79 உம் வீடும் கிணறும் செய்பயிர், வான்பயிர்களும் மற்றும் அதற்கு சேர்ந்தவையும் இதற்கு எல்லை

கிழக்கு :-1.2 அடி அகலங்கொண்ட ஒழுங்கை.
வடக்கு:-சுஜீவன் பெண் மிதிலாவின் ஆதனம்.
மேற்கு :-புலெந்திரன் கைம்பெண் சாந்தியின் ஆதனம்.
தெற்கு :- நாகலிங்கம் பேரின்பராஜாவின் ஆதனம்.

தற்போது குகனேந்திரா பெண் பிரணவாஜினி இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது குகனேந்திரா பெண் பிரணவாஜினி என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

விஸ்வலிங்கம் மணிவண்ணன்
கௌரவ முதல்வர்
மாநகரசபை
யாழ்ப்பாணம்.

## இலங்கையின்...

அது குறித்துத்தான் ஜெனிவாவில் ஐ.நா.மனித உரிமைகள் சபையும் அமெரிக்காவும் கரிசனை கொண்டுள்ளன என்று தெரிவித்தார் இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் அலைனா ரெப்லிட்ஸ்.

அமெரிக்கத் தூதுவர் அலைனா, யாழ். ஊடகங்களின் பிரதிநிதிகளை நேற்றுக் காலை சந்தித்துக் கலந்துரையாடினார். அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை இறைமையுள்ள ஒரு நாடு. அதன் உள்ளக விவகாரங்களில் தலையிடுவது அமெரிக்காவின் நோக்கம் அல்ல. ஆனாலும், உலகம் முழுவதும் மனித உரிமைகளை நிலைநாட்ட அமெரிக்கா கூடுதல் கரிசனை கொண்டுள்ளது. அதனால்தான் இலங்கை விவகாரத்திலும் நாம் அக்கறைப்பாடு கொண்டுள்ளோம். இறைமையுள்ள நாடு என்ற அடிப்படையில் தன் நாட்டு மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கும் கடைமையும் இலங்கைக்கு உள்ளது. பாதிக்கப்பட்ட மக்கள் 12 ஆண்டுகளாகக் காத்திருக்கின்றனர். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் தவிக்கின்றனர். இந்த நிலைமை இப்படியே நீடித்துச் செல்ல அனுமதிக்க முடியாது. இதை இப்படியே விட்டுவிட முடியாது. அதனால்தான் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு சர்வதேச நியமனங்களுக்கு அமைவாக நீதி தேவை என்று வலியுறுத்துகின்றோம்.

அமெரிக்க அரசு சர்வதேச அளவில் மனித உரிமைகளை நிலைநிறுத்துவதில் காத்திரமாகப் பங்களிப்பை உறுதிசெய்ய விரும்புகின்றது. அதனால் எதிர்காலத்திலும் இலங்கை விவகாரத்தில் மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவின் பங்களிப்பு அதிகமாக இருக்கும்.

**புலிகள் மீது தடை நீடிக்கும்**

அதேவேளை விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கும் எண்ணம் அமெரிக்காவுக்கு இல்லை. புலிகள் மீதான தடை தொடர்கின்ற அதேநேரத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வதேச நியமனங்கள் மற்றும் பொறிமுறைகள் அடிப்படையான தீர்வுக்காக அமெரிக்கா குரல் கொடுக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## முதலாம்....

டும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. அதற்கமைய இரண்டாம் தவணை கல்விச் செயற்பாடுகள் எதிர்வரும் மார்ச் மாதம் 15ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-க)

## 955 பேர்...

றுத் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ். மாவட்டத்தில் கொரோனாப் பெருந்தொற்றுக்கு உட்பட்டவர்களின் எண்ணிக்கை தற்போது 232ஆக அதிகரித்திருக்கின்றது. நேற்று (நேற்றுமுன்தினம்) 13 நபர்களுக்கு பருத்தித்துறைப் பகுதியில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதன் பிரகாரம் இந்த எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது. அத்தோடு 190 பேர் இதுவரை பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் என்ற அடிப்படையில் 487 குடும்பங்களைச் சேர்ந்த 955 நபர்கள் தற்போது சுயதனிமையில் உள்ளனர். கடந்த சில தினங்களாக யாழ்ப்பாணத்தில்தொற்று அதிகரித்துவருவதுவேதனையளிக்கின்றது. இதைக்கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் - என்றார். (ம-20)

## இலங்கைக்கு...

இது தொடர்பில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்ரனி பிளிங்கன் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் கடந்த கால அட்டூழியங்களுக்கு பொறுப்புக்கூறல் இல்லாமை தொடர்பாக கொண்டு வரப்படும் தீர்மானங்களை ஆதரிக்க ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையை ஊக்குவிக்கின்றோம். சிரியா மற்றும் வடகொரியாவில் நடந்து வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும், இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற அட்டூழியங்களுக்கு பொறுப்புக்கூறல் இல்லாமை மற்றும் தென் சூடானின் நிலைமை குறித்து மேலும் விசாரணை நடத்த வேண்டிய அவசியம் குறித்தும் நாம் வலியுறுத்துகின்றோம். அத்துடன் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் மீண்டும் இணைந்துகொள்ள எதிர்பார்த்துள்ளோம் - என்றார். (ம-இ)

## போர்க்குற்றவாளிகளுக்கு...

மானம் அமையப்பெறவேண்டும். அந்தத் தீர்மானத்தை உறுப்பு நாடுகள் அனைத்தும் ஆதரிக்கவேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ளது. இந்த அமர்வில் உரையாற்றிய இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன, இலங்கை தொடர்பான ஆணையாளரின் அறிக்கையை நிராகரித்ததுடன், உறுப்பு நாடுகளும் அதனை நிராகரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இவ்வாறானதொரு நிலையில் பிரிட்டன் முன்வைக்கவுள்ள தீர்மான வரைவின் நகல் கடந்த சில நாள்களுக்கு முன்னர் வெளியானது. அது காத்திரமானதாக இல்லை என்று தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் விமர்சித்து வந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் முடிந்து 11 ஆண்டுகள் கடந்து விட்டன. எனவே நீதிக்காகவும், தீர்வுக்காகவும் ஏங்கிக் கொண்டிருக்கும் தமிழர்களுக்கு நீதியையும், தீர்வையும் வழங்குவது ஐ.நா. மனித உரிமை சபை உள்ளிட்ட சர்வதேச சமூகத்தின் பிரதான கடமையாகும். பிரிட்டன் சில நாடுகளுடன் இணைந்து முன்வைக்கவுள்ள தீர்மானத்தை வலுவாக்கிச் சமர்ப்பிக்க வேண்டும். அனைத்து உறுப்புரிமை நாடுகளும் அதற்கு ஆதரவு வழங்க வேண்டும் - என்றார். (ம-ஒ,5,22)

## ஊடக...

**அலைனா. அமெரிக்கத் தூதுவர் அலைனாவுக்கும் யாழ். ஊடகங்களின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு,** யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியொன்றில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இதன்போது இலங்கையில் இடம்பெறும் ஊடக அடக்குமுறைகள் தொடர்பில் அவருக்கு சுட்டிக்காட்டப்பட்டது. அதற்குப் பதிலளித்த அலைனா மேலும் தெரிவித்ததாவது:

'இலங்கையில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் படுகொலைகள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்கள் தொடர்பில் அமெரிக்கா என்றும் கரிசனை கொண்டுள்ளது. இதுதொடர்பில் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதிகிட்ட அமெரிக்கா தொடர்ந்தும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் என்றார். (ம)

## கொரோனாத்...

வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனாத் தடுப்பூசி சுகாதாரத்துறையினருக்கு ஏற்றப்பட்டது. அதற்கு அமைவாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்களுக்கும் ஏற்றப்பட்டது. கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட மருத்துவ நிபுணரும் தடுப்பூசி ஏற்றியிருந்தார். தடுப்பூசி ஏற்றியும் அவருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது என்று செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. இது மக்கள் மத்தியில் தடுப்பூசி தொடர்பில் அவநம்பிக்கையை ஏற்படுத்தி விடும். தடுப்பூசி ஏற்றுவது தொடர்பில் சில விளக்கங்கள் உள்ளன. இந்தத் தடுப்பூசி ஏற்றப்பட்டு 3 தொடக்கம் 4 வாரங்களின் பின்னரே 70 சதவீதமாக எதிர்ப்பு சக்தி உருவாகும். இரண்டாவது தடுப்பூசி 3 மாதங்களுக்குள் ஏற்றப்படும். அதன் பின்னர் 85 சதவீதமான எதிர்ப்பு சக்தி உருவாகும்.

இதனாலேயே தடுப்பூசி ஏற்றிக்கொண்டாலும் கொரோனாத் தடுப்பு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று மக்களை நாம் கோருகின்றோம்- என்றார். (ம-ஒ,5)

## 5 ஆண்டைத்....

நேற்றுத் தொட்டது. இதை முன்னிட்டு கவனவீர்ப்பு போராட்டத்திலும் அவர்கள் ஈடுபட்டனர். இதுதொடர்பில் உறவுகள் தெரிவித்ததாவது:

எமது போராட்டம் இன்றுடன் (நேற்று) ஐந்தாவது வருடத்தை எட்டுகின்றது. ஆனாலும் எமக்கான நீதி கிடைக்கவில்லை. எமது போராட்டங்களில் பங்கு பற்றிய பல பெற்றோர் பிள்ளைகளைக் காணாத ஏக்கத்துடனேயே உயிழந்துள்ளனர். எமதுபிள்ளைகள் அழிக்கமுடியாத சாட்சிகளாகியுள்ளனர். அவர்களுக்கு நீதி கிடைக்கும்வரை எமது போராட்டம் தொடரும். அதற்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவிகளை நாம் எதிர்பார்த்து நிற்கிறோம் - என்றனர். (ம-ப,110)

## சர்வதேச...

யாவுக்கு இருக்கும் ஒரு சந்தர்ப்பமே சர்வதேச குற்றவியல் நீதிமன்றமாகும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் மனித உரிமைகள் சபைத் தீர்மானம் தமிழ் மக்களுக்கான நீதி மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய விடயங்களில் ஒரு திருப்புமுனையாக அமையும் என்று எதிர்பார்த்திருந்தோம். ஆனால், தற்போது வெளியாகியுள்ள முதலாவது தீர்மான வரைபு பெரும் ஏமாற்றத்தை எமக்கு அளித்திருக்கின்றது. இதுதொடர்பில் எனது ஏமாற்றத்தையும் கடும் அதிருப்தியையும் சில தினங்களுக்கு முன்னர் வெளியிட்டிருந்தேன்.

இந்த வரைபு காரணமாக இலங்கையின் வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் பாதுகாப்பு தொடர்பில் நிச்சயமற்ற ஒரு சூழ்நிலை உருவாகி இருப்பதுடன் அவர்கள் மத்தியில் தமது பாதுகாப்பு பற்றிய ஒரு அச்சமும் உருவாகி வருகின்றது. இந்த வரைபு அப்படியே நிறைவேற்றப்பட்டால், தமிழ் மக்களின் பாதுகாப்பு பெரும் ஆபத்தான நிலைமைக்குச் செல்லும். ஏற்கனவே எமக்கு எதிரான செயற்பாடுகள் கழுத்துவரை வந்துவிட்டன. இலங்கையில் மோசமான மனித உரிமை மீறல்கள் எதிர்காலத்தில் இடம்பெறுவதற்கான ஆபத்தான நிலைமை ஏற்பட்டுள்ளது என்று மனித உரிமைகள் ஆணையாளரே குறிப்பிட்டுள்ளார்.

இந்த வரைபு வலுவாக்கப்படுவதற்கு அல்லது மேலும் வலுவற்றதாக்கப்படுவதற்கு இன்னமும் இரண்டு வாரங்கள் மட்டுமே இருக்கின்றன. இனப்படுகொலை, போர்க்குற்றம் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றம் ஆகியவற்றை விசாரிப்பதற்கும் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்துவதற்கும் ஐ.நா. பாதுகாப்புச் சபை மற்றும் ஐ.நா. பொதுச்சபை ஆகியவை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவற்றை ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானம் வலியுறுத்த வேண்டும் என்பதே ஒட்டுமொத்த தமிழ் மக்களினதும், அவர்களை பிரதிநிதித்து வப்படுத்தும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளினதும் கோரிக்கையாக இருக்கின்றது. இந்த வலியுறுத்தலை தீர்மானத்தில் கொண்டுவருவதற்கு இந்தியா முக்கிய வகிபாகத்தை மேற்கொள்ள முடியும்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு மட்டுமன்றி சர்வதேச நீதிமன்றத்துக்கும் கொண்டு செல்வதற்கு இந்தியா நடவடிக்கைகளை முன்னின்று செயற்படுத்த வேண்டும். தமிழ் மக்களுக்கான தீர்வு தொடர்பில் வடக்கு கிழக்கிலே சர்வதேச சமூகத்தால், பொது வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படுவதற்கு இந்தியா தலைமை தாங்கி செயற்படுவதானது இலங்கைத் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி இந்தியாவுக்கும் பல அனுகூலங்களைப் பெற்றுக்கொடுக்கும் என்றுள்ளார். (ம-ப)

## மேலும்...

நேற்றுப் புதன்கிழமை உறுதிப்படுத்தப்பட்டது. அவர்களில் 4 பேர் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று 431 பேரின் மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதிலேயே மேற்படி ஏழு பேருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பணியாற்றும் சிற்றூழியர் ஒருவரும் தொற்றுக்கு உட்பட்டுள்ளார். (ம-26)







# இந்தியாவின் சுழற்பந்துவீச்சில் சுருண்டு மடிந்தது இங்கிலாந்து

**புதுடெல்லி, பெப். 25**

**இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் நாளிலேயே இந்திய அணி வெற்றிபெறுவதற்கான அனைத்து ஏதுநிலைகளையும் உருவாக்கியுள்ளது**

உலகின் மிகப்பெரும் கிரிக்கெட் மைதானமான குஜராத் 'நரேந்திர மோடி' மைதானத்தில் இந்த ஆட்டம் ஆரம்பமானது. கொரோனா விதிமுறைகளைப் பின்பற்றி 50 வீதமான பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இதனால் 55 ஆயிரம் ரசிகர்கள் இந்த ஆட்டத்தை நேரில் பார்த்தனர்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு முன்வரிசை வீரர்களான சிப்லி, பேர்ஸ்ரௌவ் இருவரும் ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழந்து ஏமாற்றினார்கள். கிரௌவ்லி, ரூட் இருவரும் அணியைப் பலப்படுத்த சிறு முயற்சியை மேற்கொண்டனர். எனினும் அது பயனளிக்கவில்லை.

அக்சர் பட்டேலின் எழுச்சியான பந்துவீச்சில் இங்கிலாந்து வீரர்கள் ஈடுகொடுக்க முடியாது ஒருவர் பின் ஒருவராகப் பவிலியன் திரும்பினர். கிரௌலி பெற்ற 53 ஓட்டங்கள்தான் இங்கிலாந்து சார்பாக அதிகபட்சம். வேறெவரும் பதின்மத்தைத் தாண்டவில்லை.

முடிவில் 112 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது இங்கிலாந்து அணி.

பந்துவீச்சில் அக்சர் பட்டேல் 6 இலக்குகளையும், அஸ்வின் 3 இலக்குகளையும், இசாந் சர்மா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணிக்கு, இளம்



வீரரான கில் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். புஜாரா ஓட்டமெதையும் பெறவில்லை. ஒரு கட்டத்தில் இந்திய அணி 34 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்திருந்தது. அதன்பின்னர் அணித்தலைவர் கோலி, ஆரம்ப வீரர் ரோகித் இருவரும் பொறுப்பாக விளையாடினார்கள். 27 ஓட்டங்களுடன் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார் கோலி. அரைச்சதம் கடந்தார் ரோகித். நாள் முடிவில் இந்திய அணி 3 இலக்குகளை இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ரோகித் 57 ஓட்டங்களுடனும், ரகானே ஓர் ஓட்டத்துடனும் களத்தில் உள்ளனர். (ம)

311 வாரங்களாக முதலிடம்

## பெடரரின் சாதனையை தகர்த்தார் ஜோகோவிக்

லண்டன், பெப். 25

சர்வதேச ரென்னிஸ் அரங்கில் அதிக வாரங்கள் முதலிடத்தில் இருந்தவர் என்ற பெடரரின் சாதனையை முறியடித்தார் சேர்பிய வீரரான ஜோகோவிக். ஆஸ்திரேலியப் பகிரங்கத் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் வெற்றிபெற்று சம்பியனானார் ஜோகோவிக். இதையடுத்து தொடர்ந்தும் அவர் முதலிடத்தில் நீடிக்கின்றார். இந்த வாரத்துடன் தொடர்ச்சியாக அவர் 311 வாரங்கள் முதலிடத்தில் உள்ளார். 310 வாரங்கள் பெடரர் முதலிடத்தில் இருந்தமையே சாதனையாகப் பதிவாகியிருந்த நிலையில் அதை ஜோகோவிக் முறியடித்தார். (ம)



முதலாம் பக்கத் தொடர்ச்சி...




### யாழ்ப்பாண....

மைச் சான்றிதழ்களையும் வழங்கினார். நிகழ்வில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

கொரோனா நிலைமைகளைக் கருத்தில் கொண்டு இறுக்கமான சுகாதார நடைமுறைகளுடன் இந்தப் பட்டமளிப்பு விழா இடம்பெறுகின்றது. (ஓ.5)

**தேங்காய் கொப்பறா தேவை**
மொத்தமாகவும் சில்லறையாகவும் தேவை. உங்கள் இடத்திற்கே வந்து கொள்வனவு செய்யப்படும்.
தொடர்பு: 0778094439, 0774148251


**வேலையாட்கள் தேவை**
ஏழாலை தெற்கிலுள்ள ஒப்பந்தகார நிறுவனம் ஒன்றிற்கு.
மேசன் - 03, கூலி - 03
வீடு மற்றும் பூந்தோட்ட பராமரிப்பாளர் (ஆண், பெண்)
தொடர்புகளுக்கு: 021 224 3881
(8.30 A.M - 1.00 P.M)

**பணிப்பெண் தேவை**
கிளிநொச்சியில் ஜெயந்தி நகரில் வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.
சம்பளம் 25000/-
தொடர்புக்கு: 077 741 9512

**கட்டட நிர்மாணப்பணிக்கு ஆட்கள் தேவை**
வவுனியா, முல்லைத்தீவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் கட்டட நிர்மாணப்பணிக்கு
* மேற்பார்வையாளர் ( குறைந்தது NVQ Level 4 or Equivalent தகுதி )
* படவரைஞர் ( AutoCAD Operator ) .
* மேற்பார்வை உதவியாளர்கள் உடன் தேவை
( தகுதியானவர்கள் பொருத்தமான பதவிக்கு விண்ணப்பிக்கவும் )
jupitern23@gmail.com

FLC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்ச் வகுப்புக்கள் (DELF A1, A2, B1, B2)
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma
French, தமிழ் மொழி மூலம் பூரண விளக்கத்துடன் கற்பிக்கப்படும்.
V. ஜெகன் (Trained in France)
19, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781
23/2, சோமசுந்தரம் அவெனியு, சுண்டிகுளி. 0779789456 / 0212219497 கச்சேரி Fuel Station அண்மையில்
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் Work / Student Visa கான IELTS வகுப்புக்கள்.

## மரண அறிவித்தல்



மலர்வு 15.08.1961 — உதிர்வு 23.02.2021

**திரு. அல்போன்ஸ் மரியசெல்வம்**

நவாலி தெற்கு மானிப்பாயை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு.அல்போன்ஸ் மரிய செல்வம் 23.02.2021 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோசெவ், புனிதமலர் ஆகியோரின் அன்பு மகனும், பப்ரிசன், கமலம், பாக்கியம், றோஸ், பெனாட் (ஆசிரியர்- இளவாலை கொன்வென்ற்), கொறற்றி (ஆசிரியர்-யா/தோப்புக்காடு ஞானசம்பந்த வித்தியாசாலை), சாள்ஸ் (CLS Engineering), காலஞ்சென்றவர்களான மரியபவளம், பெல்டானோ ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தவச்செல்வநாயகி, ஜெயசீலன், சிவச்செல்வநாதன், ஜெயக்குமார், கலஸ்ரின், அன்ரன், லிசா ஆகியோரின் மைத்துனரும், டென்சில் (சுதர்சினி), ஷாம், டிலோசன், டெனி, பிராங்கிளின், பிளேமிங், ஏஞ்சலா, ஜோர்ச், ஆகியோரின் பாசமிகு மாமனாரும், எனோஜ், எமில்டன், றொசாளினி, றொசாரியோ ஆகியோரின் பெரியதந்தையும், டஸ்வின், மொறிஷா, சேஜிற் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்கம் இன்று (25.02.2021) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் சென் பீற்றர் தேவாலயத்தில் இடம்பெறும் இரங்கல் திருப்பலியின் பின் சென் பீற்றர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
T.P: 077 978 7979, 077 997 4662



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.